உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-7 இதழ்-188

ஏப்ரல் 16-30 2025



**இந்த நாயனார் இருந்திருந்தால் நாக்கு இல்லாமல் பல தலைவர்கள் திரிந்திருப்பார்கள்**



## எலும்பு கூடாக காட்சி தரும்

# முருகபெருமான்

# திருமண பிரச்சனை, தம்பதியர் பிரச்சனைகளை தீர்க்கும் வழிபாடு



திருமணத்தில் தொடர்ந்து தடங்கல் பிரச்சனை ஏற்படுகிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் ராகு கேதுவாகத்தான் இருக்க முடியும். ராகு கேதுவை வழிபாடு செய்யும்பொழுது அந்த பிரச்சினைகள் அனைத்தும் நீங்கும் இதற்கு எளிய வழிமுறையில் பூஜை முறை உள்ளது.

ஒவ்வொரு வாரமும் வரக்கூடிய வெள்ளிக்கிழமை அன்று ராகு காலமான காலை 10:30 மணியிலிருந்து 12:00 மணிக்குள் அருகில் நாக சொரூபமாக இருக்கக்கூடிய தெய்வத்தின் ஆலயத்திற்கு செல்ல வேண்டும்.

குறிப்பாக நாகாத்தம்மன், கருமாரியம்மன் போன்ற கோவில்களுக்கு செல்லலாம். சுற்று வட்டாரத்தில் அதுபோன்ற ஆலயம் இல்லாதபோது புற்று இருக்கும் இடத்திலும் இந்த வழிபாட்டை மேற்கொள்ளலாம்.

தாழம்பூ மற்றும் மனோரஞ்சித பூக்களை நாகாத்தம்மனுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

புற்றாக இருக்கும் பட்சத்தில் அந்த புற்றின் அடியிலும் வைத்து வழிபாடு செய்யலாம். இப்படி வைத்து வழிபாடு செய்துவிட்டு கோவிலையோ அல்லது புற்றையோ 21 முறை வலம் பெற வேண்டும்.

இப்படி ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அன்று தொடர்ந்து எட்டு வாரங்கள் வழிபாடு செய்தால் திருமணம் தொடர்பான அனைத்து பிரச்சினைகளும், தம்பதிகளுக்கு இடையே இருக்கக்கூடிய பிரச்சனைகளும் முற்றிலும் நீங்கும்.

# சித்த மருத்துவத்தில் பரிபாஷைச் சொற்கள் ஏன்?

சிந்தையை உள்ளடக்கி சுழுமுனை தன்னை நோக்கி தியானித்தால் ஆகாய கற்பம் தானே கிடைக்கும். இந்த ஆகாய கற்பத்தை நாளும் உண்டு வந்தால் மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம் என்கின்றனர் சித்தர்கள்.

**'பேச்சேது கற்பமுண்டால் திரேகந்தானும்**
**பிலத்ததடா நரைதிரையும் ஓடிப்போகும்'**

– என்கிறது சித்தர் பாடல்.



நோயுற்ற துன்பமும் நோயற்ற இன்பமும் பிறரால் தனக்குக் கிடைப்பதில்லை; மனிதன் தனக்குத்தானே தேடிக்கொள்வது. சித்த மருத்துவத்தை மறைவாகக் கூறாவிட்டால் அதன் சிறப்பி னால் இறந்தவனும் உயிர் பெற்றிடக்கூடும்.



அவ்வாறு செத்தவர் எல்லாம் திரும்பி வந் தால் உலகில் இடங் கொள்ளாமல் போகும்! அதன் காரணமாகவே சித்தர்கள் மருத்துவநூல்க ளில் பரிபாஷைச் சொற்களை அதிகம் நிரப்பியுள்ளனர்.



e-magazine aanmeegamalar.com

# திருவானைக்கா விபூதிப்பிரகார மகிமை



திருஆனைக்காவைப்பற்றி நாம் சில விஷயங்கள் அறிந்திருப்போம். ஆனால் அரிய பல செய்திகளுடன் நாம் விபூதிப் பிராகார மகிமை பற்றி சிந்திக்க இருக்கின்றோம்.

ஆனைக்காவையும் ஸ்ரீஸ்ரீ அகிலாண்டேஸ்வரியையும், ஸ்ரீ ஸ்ரீ ஜம்புகேஸ்வரரையும் பற்றி எழுத்துக்களாலோ, வார்த்தைகளாலோ இயம்ப இயலாது. அப்படி எவரேனும் நினைத்தால் அது சமுத்திரத்தில் எவ்வளவு கொள்ளளவு தண்ணீர் இருக்கும் இன்று ஆராய்ச்சி செய்வதற்கு ஒப்பாகும். “அவன் அருளாலே அவன் தாள் வணங்கி” நாம் விபூதிப்பிராகாரம் மகிமை பற்றி சிந்திக்க முயற்சிப்போம்.

இக்கோயில் பஞ்சபூத தலங்களில் ஒன்றான “நீருக்கு” உரியது. காவிரி நதியின் வடகரைத் தலங்களில் அமைந்துள்ள 60 வது பாடல்பெற்ற சிவ ஸ்தலம்.

இந்த ஆலயத்தின் நாலாவது ப்ரஹார சுவர் கட்டும்போது சிவபெருமானே ஒரு சித்தரைப் போல் வந்து மதில் சுவர் எழுப்பிய பணியாளர்களுக்கு விபூதியை கூலியாகக் கொடுத்ததாக ஸ்தல வரலாறு.

முதலாவதாக ஏன் விபூதிப்பிரகாரம் சிறப்பு வாய்ந்தது? அதை எழுப்பியவர் சாக்ஷாத் ஸ்ரீ ஸ்ரீ ஜம்புகேஸ்வரரே ஆவார் இந்த விபூதிப்பிரகார வலம் என்பது திருவண்ணாமலை கிரிவலம் எப்படி மகிமை வாய்ந்ததோ அவ்வளவு மகிமை வாய்ந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

சிறப்பம்சம் என்னவென்றால் விபூதிப் பிராகாரத்தை ஸ்ரீ ஸ்ரீ ஜம்புகேஸ்வரே சிவ கணங்களைக் கொண்டு கட்டுவித்தார். அங்கு பணியாற்றிய பணியாளர்களுக்கு சித்தபுருஷர் ரூபத்தில் எம்பெருமான் ஒவ்வொரு நாள் மாலையும் விபூதிப்பை ஒன்றை கூலியாக வழங்குவார். அது அவர்கள் கடைவீதிக்கு சென்றவுடன் எவ்வளவு உழைப்பைநல்கினார்களோ அதற்கே ற்றவாறு காசுகளாக மாறி இருக்கும்.

ஸ்ரீ ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் அவர்கள் கால் களால் நடந்தவாறே இம்மதிலை அவரின் மேற்பார்வையில் கட்டுகின்றார். அதற்கான காரணங்கள் சில: ஸ்ரீ ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் அசரீரியாக மூவேந்தர்களுக்கு தானே விபூதி பிராகாரத்தை மட்டும் கட்டுவிப்பதாக கூறுகின்றார் மேலும் கூறுகிறார் இதை நான் கட்டுவதால் நீங்கள் திறமை வாய்ந்தவர்கள் அல்ல என்று அர்த்தம் ஆகாது என்றும் கூறுகின்றார். (மதிலுக்கான கற்கள் சிவகணங்களால் பாதாள லோகத்தில் இருந்து கொணரப்பட்டவையாகும்).

### ஏன் விபூதிப்பிராகாரம் வலம் வர வேண்டும்?

1. ஆயிரக்கணக்கான ஜென்மங்களில் செய்த புண்ணியத்தினால்தான் விபூதிப் பிரா காரம் பற்றி நினைக்கவும், அதைப்பற் றிய செய்தியை அறியவும் அதில் ஈடுபடவும் முடியும் என்பதிலிருந்து அதன் பெருமையை அறிந்து கொள்ளலாம்.
2. நான் அதே ஊரில் வசித்தவர்கள்

e-magazine
aanmeegamalar.com








சிலரிடம் விபூதிப்பிராகாரம் பற்றி கேட்ட போது அதைப்பற்றி அவர்களுக்கு தெரிய வில்லை என்பதை குறிப்பிடவிரும்பு கிறேன்.' இதிலிருந்து மேற்கூறிய கருத் தின் திறனை நம்மால் அறிய முடியும்.

3. கைகளால் தொட்டு விபூதிப்பிராகார மதி லை வணங்கினால் அஸ்வமேத மகாயாக பலனை அடைவார்கள்.
4. நமஸ்கரித்தால் கோடி அஸ்வமேத யாக பலனை அடைவார்கள்.
5. ஆயிரம் நாக்குகள் கொண்ட ஆதிசேஷ னாலும் இவ்விபூதிப் பிராகார மகாத்மி யத்தை கூற முடியாது.
6. யார் ஒருவர் விபூதிப்பிரகாரத்தை பற்றி மற்றவர்களுக்கு கூறுகிறார்களோ ஸ்ரீ ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் அவர்கள் விஷயத்தில் சந்தோஷம் கொள்வார்.
7. நினைத்தது அத்தனையும் அளிக்க வல் லது இவ்விபூதிப்பிராகார பிரதக்ஷிணம்
8. சர்வ பாவங்களும் உடன் விலகும்
9. நீரிழிவு நோய் உள்ளவர்கள் தவறாமல் பிரதக்ஷிணம் செய்தால் அந்நோய் வில கும்.
10. பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் அப்பேறை அடைவார்கள்.
11. இதை மேற்கொள்பவர்களை கண்டு பிரம்மா முதலிய தேவர்கள் எப்போதும் ஆனந்தத்துடன் பூஜிக்கின்றனர்.

## விபூதிப்பிராகாரம் பற்றிய சில குறிப்புகள்:

1. பிரதக்ஷிணம் செய்யும்போது சிவபஞ் சாக்ஷரம் சிவபுராணம், தேவாரம் போன்ற வைகளை உச்சரித்துக் கொண்டு வலம் வருதல் நலம்.
2. காலை 11 மணிக்கு முன்பாகவும் மாலை 4:30 மணிக்கு மேலும் செய்வது சிறப்பு.
3. சாதாரண நடையில் பூர்த்தி செய்ய 35 முதல் 40 நிமிடங்கள் ஆகும்.
4. வலம் வந்த பின்பு எம்பெருமானை வணங்குதல் சிறப்பு.
5. வெறும் காலில் பிரதக்ஷிணம் செய்ய இயலாதவர்கள் கால் உறை (Socks) அணிந்து வலம் வரலாம்.
6. இயன்றவரை இப்பிரகாரம் பற்றிய மகிமை யை அனைவருக்கும் கூறுதல் நலம்

(ஆதாரம் பாத்மபுராணம் கஜாரண்ய மகாத்மியம்)

எப்படி செல்வது?

திருச்சி மெயின் பேருந்து நிலையத்திலிருந் தும் ஜங்ஷனிலிருந்தும், ஸ்ரீரங்கம் செல்லும் பேருந்துகள் அனைத்தும் திருவானைக்காவல் வழியாக செல்லும் "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி"

"வேண்டத்தக்கது அறிவோய் நீ! வேண்ட முழுதும் தருவோய் நீ

– தில்லை

தொலைபேசி எண்: 9487282542

## நல்ல வாழ்க்கைத் துணையும், பொன்னும் பொருளும் அள்ளித்தரும்

# கனகசாலக் குமரன்






ஈரோடு மாவட்டம், எழுமாத்தூரில் விற்றிருக்கும் அருள்மிகு கனகாசல குமரன் திருக்கோவில் வீற்றிருக்கும் கனகசாலக் குமரனை வழிபட்டால் நல்ல வாழ்க்கைத் துணை அமையும்; வீட்டில் பொன்னும் பொருளும் சேரும் என்பது ஐதீகம்!

இத்திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள், நல்ல வாழ்க்கைத் துணை, நிறைந்த செல்வம் வேண்டி முருகப்பெருமானிடம் வேண்டுதல் வைக்கின்றனர்.



வேண்டுதல்கள்நிறைவேறிய பக்தர்கள் தொடர்ந்து ஐந்து செவ்வாய்க் கிழமைகள் இங்குள்ள முருகப்பெருமானுக்கு விளக்கேற்றி தங்களது நேர்த்திக்கடனைச் செலுத்துகின்றனர்.

தலபெருமை: ஏழு கன்னிமார்களுடன் இலந்தை மரத்தடியில் வீற்றிருக்கும் விநாயகப் பெருமானும் அற்புதத் தரிசனம் தருகிறார். இங்கு வந்து அண்ணன் விநாயகரை வணங்கித் தொழுதுவிட்டு, கனகசாலக் குமரனைக் கண்ணாரத் தரிசனம் செய்து மனதாரப் பிரார்த்தனை செய்தால், நல்ல வாழ்க்கைத் துணை அமையும்; வீட்டில் பொன்னும் பொருளும் சேரும் என்பது ஐதீகம்! தொடர்ந்து ஐந்து செவ்வாய்க்கிழமைகள் இங்கு வந்து முருகப்பெருமானுக்கு விளக்கேற்றி வழிபட்டால், பிள்ளை பாக்கியம் கிடைக்கப் பெறலாம் என்கின்றனர் பக்தர்கள்.

செவ்வாய்க் கிழமைகளில் இங்கு கோ பூஜை சிறப்புற நடைபெறுகிறது. அப்போது கோயிலைச் சேர்ந்த கன்றுக்குட்டி தானாகவே மலையேறிச் சென்று, பூஜை செய்யும் காட்சியைக் கண்டு சிலிர்த்துப் போகிறார்கள் பக்தர்கள்.

கோவில் திறக்கும் நேரம்: காலை 5மணி முதல் 8மணி வரை, மாலை 4மணி முதல் இரவு 8மணி வரை திறந்திருக்கும்.

e-magazine
aanmeegamalar.com

# சித்தர்கள்
# என்பவர் யார்?

சித்தி என்றால் வெற்றி பெறல், அடைதல் என்று பொருள்படும்.

சித்தர்கள் காய சித்தி வேதை சித்தி யோக சித்தி ஞான சித்தி ஆகிய சித்திகளைப் பெற்று இறைநிலை அடைந்தவர்கள்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத் தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களை செய்ப வர்கள்.

இறவாநிலை பெற்று ஒளி உடலுடன் வாழ்பவர்கள்.

சிலர் துரிய தியான நிலையில் இருப்பவர்கள்.

ஆன்மிகமலர்.காம்

சமூக சீர்திருத்தவாதிகள்.

அறிவியலாளர்கள்.

இறைவனோடு ஒன்ற அஷ்டாங்க யோகம் என்ற வாசி யோகம் சொன்னவர்கள். இது சித்தர்கள் செய்த யோகம் சித்தர் யோகம் மற்றும் சிவ யோகம் இது வாசி யோகத்தின் உயர் நிலை).

சித்த மருத்துவம் என்ற மருத்துவ முறை நிறுவியவர்கள்.

மனிதன் இறந்து போகாமல் நோய் இல்லாமல் இளமையுடன் வாழும் சாகாக்கலை எனும் அறி வியலை உலகிற்குக் கொடுத்தவர்கள். அதில் இன்றைய மருத்துவ அறிவியல் முன்னேற்றமான ஸ்டெம் செல் தியரி பற்றிச் சொன்னவர்கள்.

கேன்சர், எயிட்ஸ் போன்றத் தீரா நோய்களுக்கு மருத்துவ முறை சொன்னவர்கள்.

எல்லையற்றக் கருணை மிக்கவர்கள். வேண்டியதைத் தரும் வல்லமை மிக்கவர்கள்.

பிரபஞ்சப் பயணியாகப் பிரபஞ்சத்தைச் சுற்றி வந்தவர்கள், பிறகோள்களிலும் மனிதர் கள் இருக்கிறார்கள் என்ற உண்மையைச் சொன் னவர்கள்.

காலப்பயணம் செய்தவர்கள்.

அல்கெமி என்ற ரசவாதம் கண் டவர்கள்.

பத்து அறிவுகள் பெற்ற வர்கள்.

அறுபத்து நான்கு வகை சித்திகள் பெற்றவர்கள்.



ஆன்மிகமலர்.காம்



# எலும்பு கூடாக காட்சி தரும் முருகன்

இந்தியாவின் வடகிழக்கு பகுதியில் இமயமலை தொடரில் எலும்பு கூடாக காட்சி யளிக்கிறார் முருகன். குளிர் பிரதேசமான இமயமலை அடிவாரத்தில் உள்ள, பத்ரிநாத் கேந்திரநாத்துக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ள உத்தரகாண்ட் மாநிலத்தின் ருத்ர பிரியா மாவட்டத்திலிருந்து சுமார் 40 கிலோமீட்டர் தொலைவில் மணிகள் ஒலிக்கும் உற்சாகமான ஒலி மற்றும் கார்வால் இமயமலையின் கண்கவரும் இந்தப் பகுதியில், 10,000 அடி உயரத்தில் அமைந்துள்ள பண்டைய கார்த்திக் சுவாமி கோயில்

இங்கு முருகன் எலும்பு வடிவில் காட்சி யளிக்கிறார்.

இந்த கோயிலை சென்றடைய மூன்று கிலோமீட்டர் தூரம் நடை பயணம் மேற்கொள்ள வேண்டும். நடை பயணத்தின் வழிதடமானது சிறிது தூரம் சமம் தரையாகவும், பிறகு செங்குத்தான மலையேற்றமாகவும் இருக்கும்.

குறிப்பாக தமிழகத்தின் பழனி முருகன் கோவிலுக்கு கூறப்படும் புராணக் கதையையே, இக்கோவிலிலும் கூறப்படுகிறது. ஆனால் சற்று வித்தியாசமாக...

பிரபஞ்சத்தின் முதல் பிரார்த்தனையின் மரியாதை யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்க முடிவு செய்கின்றனர். சிவபெருமானும் பார்வதி தேவியும் தங்கள் இரு மகன்களையும் சோதிக்க முடிவு செய்தனர்.

சவால் என்னவென்றால், பிரபஞ்சத்தை முதலில் ஏழு முறை சுற்றிவளைத்தவர் வெற்றி யாளராக அறிவிக்கப்படுவார். போர்க் கடவுள் என்றும் 33 கோடி தேவர்களின் கடவுள் என்றும் அழைக்கப்படும் கார்த்திகேயன் உடனடியாக தனது மயில் மீது ஏறினார். மறுபுறம், விநாயகர் தனது தந்தையும் தாயும் பிரபஞ்சத்தின் உன்னத படைப்பாளிகள் என்றும், உயிரினங்கள் மற்றும் உயிரினங்கள் அல்லாதவற்றின் படைப்பின் முழு வரம்பும் அவர்களுக்குள் இருந்ததாகவும் முடிவுக்கு வந்தார். அவர் அமைதியாக தனது பெற்றோரை



e-magazine
aanmeegamalar.com
ஆன்மிகமலர்







ஏழு மடங்கு சுற்றினார், இது அவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இந்த பணியின் மூலம் அவர் என்ன சாதிக்க விரும்புகிறார் என்று அவரது பெற்றோரால் கேட்கப்பட்டபோது, விநாயகர் முழு பிரபஞ்சமும் அவர்களால் உருவாக்கப்பட்டது, அவற்றில் வசிக்கிறது, எனவே, அவர்களைச் சுற்றி வளைத்து சவாலை நிறைவு செய்வது மட்டுமே பொருத்தமானது என்று பதிலளித்தார்.

சிவபெருமானும் பார்வதி தேவியும் விநாயகரின் புத்திசாலித்தனத்தையும் ஞானத்தையும் கண்டு வியந்து போனார்கள், அதே போல் சரஸ்வதி தேவியும் லட்சுமி தேவியும் விநாயகரின் அருகில் நின்று கொண்டு விநாயகரின் பதிலை கேட்டு கொண்டிருந்தனர். விநாயகர் தகுதியான வெற்றியாளர் என்று அவர்கள் முடிவு செய்து, பிரபஞ்சத்தின் முதல் பூஜை அவருக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று அறிவித்தனர்.

இதற்கிடையில், பகவான் கார்த்திகேயன் தனது சகோதரனை தோற்கடித்துவிட்டதாக நினைத்து போட்டியை முடித்து தாய் தந்தையரிடம் வருகிறார்.

ஆனால் விநாயகர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட நிகழ்வுகளைக் கேட்டவுடன், தனது சகோதரர் உண்மையிலேயே உன்னதமான உண்மையை புரிந்து கொண்டதாகவும், மரியாதை மற்றும் மரியாதைக்கு தகுதியானவர் என்றும் முருகப் பெருமானும் உணர்கிறார்.

போட்டியில் தனது தோல்வியை ஒப்புக் கொண்டு தனது பெற்றோரின் அதிருப்திக்கு தான் காரணமாகிவிட்டோமே என்று எண்ணிய கார்த்திகேயன் தனது மாம்சமான உடலை விட்டுக்கொடுத்து, இந்த இடத்தில் தனது எலும்புகளை சிவபெருமானிடம் ஒப்படைத்தார். பின்னர் அவர் கிரௌஞ்சா பர்வத் எனப்படும் கைலாஷா மலைக்கு தெற்கே தவம் செய்ய சென்றுவிடுகிறார்.

அப்படி அவர் தனது உடல் சதையை விட்டுக்கொடுத்து எலும்புக்கூடாக காட்சிதரும் வகையில் இந்த இடத்தில் ஒரு கோவில் நிர்மாணிக்கப்பட்டு முருகப்பெருமானை பக்தர்கள் வணங்கி வருகின்றனர். பகவான்





கார்த்திகேயனின் எலும்புகள் இயற்கையாகவே உருவாக்கப்பட்ட அவரது கல் உருவ வடிவத்தில் உள்ளது.

கருவறையில் அவரது மயிலின் பின்புறத்தில் விநாயகர் மற்றும் கார்த்திகேய பகவானின் சிலைகளும், வலதுபுறத்தில் ஒரு அகண்டா துனியும் உள்ளன. வனக் கடவுளான பனா தேவதா அனைவராலும் வணங்கப்படுகிறார். சமோலி மற்றும் ருத்ராப்பிரயாக் மாவட்டங்களில் உள்ள 365 கிராமங்களில் கார்த்திகேயன் இஷ்ட தேவதையாக வணங்கப்படுகிறார்.

ஒரு குறிப்பிட்ட நாளில் இந்தக் கோவிலிருந்து, பனி மூடிய பண்டர்பஞ்ச், கேதார்நாத், மேரு, சுமேரு, சவுகம்பா, நீலகண்ட, துனகிரி, நந்தா தேவி, நந்தா குந்தி, திரிசூல் மற்றும் பலவற்றை காணலாம். இந்த கோயில் ஒரு குறுகிய மலைத்தொடரின் முடிவில் அமைந்துள்ளது மற்றும் மேலே இருந்து அலக்நந்தா மற்றும் மந்தாகினியின் காட்சி வியக்க வைக்கிறது.

பிரபஞ்சத்தின் நலனுக்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் 11 நாள் நீண்ட கலாஷ் யாத்திரை மற்றும் மஹா யாகா நடத்தப்படுகிறது, இந்த விழாவின் போது இந்தப் பகுதியில் பல ஆயிரம் மக்கள் கூடுகின்றனர்.

11 நாட்களில், பகவான் கார்த்திகேயன் ஆண்டு முழுவதும் அருகிலுள்ள கிராமத்தில் வசிக்கும் போது கோவிலில் தங்குவார் என்று கூறப்படுகிறது. கோயிலால் ஏற்பாடு செய்யப்படும் சந்தியா ஆரத்தி மற்றும் மகா பண்டாரா ஒரு தெய்வீக அனுபவமாகும்.



தொலைதூர இடங்களைச் சேர்ந்த மக்கள் இந்த விழா நடைபெறும் மாதத்தில் குறிப்பாக வைகுண்ட சதுர்த்தசி மற்றும் கார்த்திக் பூர்ணிமா நாட்களில் முருகப் பெருமானுக்கு நேர்த்திகடன் செய்து தங்கள் விரதங்களை அனுசரிக்கின்றனர்.

சவுகம்பா சிகரம் மற்றும் இமயமலையை முழுவதுமாக இந்த கோவிலிருந்து தரிசிக்க விரும்பினால் அக்டோபர், மார்ச் மாதங்களுக்கு இடையில் இந்த முருகன் கோவிலுக்கு சென்றால் தரிசிக்கலாம் என்கின்றனர்.

கோயில் வளாகத்தில் வெவ்வேறு வடிவங்கள் மற்றும் அளவுகளில் தொங்கும் மணிகள் அதன் பின்னால் ஒரு சுவாரஸ்யமான கதையையும் கொண்டுள்ளன.

கார்த்திகை பூர்ணிமையின் புனிதமான சந்தர்ப்பத்தில் கோயிலுக்கு ஒரு மணியை எடுத்துச் செல்வது ஒருவரின் பிரார்த்தனையை நிறைவேற்றும் என்று கூறப்படுகிறது. கார்த்திகேயனுக்கு சீப்புகள் மற்றும் குங்குமப்பூவை வழங்குவதற்கான சடங்கும் உள்ளது, ஆனால் அது குறித்து அதிக தகவல்கள் கிடைக்கவில்லை.

பொதுவாகவே உத்தரகாண்ட், மலை பிரதேசம் என்பதாலும் பணி அதிகம் உள்ளதாலும் மூச்சு சுவாசம் சற்று கடினமாக இருக்கும்.

மலை மீது ஏற சிரமப்படும் பக்தர்களுக்கு குதிரை மற்றும் டோலி மூலமாக செல்ல வசதி உள்ளது கூடுதல் சிறப்பாகும்.

மக்கள் செல்லும் பாதை மரங்களால் இரு பக்கமும் சூழப்பட்டதோடு, சில மரங்களில் மணிகள் தொங்கவிடப்பட்டிருக்கும். ஒரு சிலமரங்கள் துணிகளால் கட்டப்பட்டிருக்கும்.

அந்த மாநில அரசின் சார்பில் இலவசமாக தண்ணீர், குளிர்பானங்கள், பழங்கள் மற்றும் குளுக்கோஸ் வழங்கப்படுகின்றன. முருகப்பெருமானின் சன்னதி கடல் மட்டத் திலிருந்து சுமார் 3048 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது இக்கோவில்.

வெள்ளை இமயமலை, பசுமையான காடுகள் மற்றும் கீழே உள்ள ஆழமான பள்ளத்தாக்கில் உள்ள அலக்நந்தா மற்றும் மந்தாகினி நீரில் ஒளிரும் ஒளி பார்ப்பவர் மனதை மயக்குவதாக இருக்கும் என்கின்றனர்.

பழனி மலைக்கு கூறப்படும் புராதன கதை இக்கோவிலுக்கும் வித்தியாசமான முறையில் கூறப்படுவதால் பழனி மலைக்கும் இந்த மலைக்கும் ஏதோ ஒருவித தொடர்பு இருப்பதாகவும் அறியப்படுகிறது.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகமலர்.காம்

# குருபக்தி!!


## கறுப்பு நூலும் வெள்ளை நூலும்

ஆசார்யார் வேதன், ஒருநாள் அதிகாலை ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டார். அருகேயுள்ள தேசத்து அரசன், அவரை யாகம் நிகழ்த்த அழைத் திருந்தான்.

பொதுவாக அவர் ஆசிரமத்தை விட்டு எங்கும் வெளியே செல்வதில்லை. கோயில் குளங்களைத் தேடிக்கூடப் போனதில்லை. இருக்கும் இடத் திலேயே தியானம் செய்து இறைவனை மனத்திற் குள் காண முடிகிறபோது, எதற்கு வெளியே செல்ல வேண்டும் என்பது அவரது சித்தாந்தம்.என்றாலும் யாகத்தை முன்னிருத்தி மன்னனின் அழைப்பைத் தட்ட முடியவில்லை. தம் சீடன் உத்தங்கனை அழைத்தார். தாம் திரும்பி வரும்வரை, குரு பத்தினியையும் பிற சிஷ்யர்களையும் பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண்டியது பிரதான சீடனான அவன் பொறுப்பு என்பதை அறிவுறுத்தினார். பின் புறப்பட்டார்!!!

குருநாதர் திரும்பி வரும்வரை அக்கறை யாக ஆசிரமத்தையும் குருபத்தினியையும் பிற சீடர்களையும் கவனித்துக் கொண்டான். ஆசிரமத்துக் கொட்டிலில் கட்டியிருந்த பசுமாடுகளுக்குத் தீவனம் போடுவதிலிருந்து ஆசிரமத்தைப் பெருக்கித் தூய்மை செய்வதுவரை அவன் செய்த பணிகள் பலப்பல. ஆசார்யர் திரும்பி வந்ததும் குரு பத்தினி, உத்தங்கனின் செயல்பாடுகளை மனநிறைவுடன் பாராட்டினாள். ஆசார்யார் மனம் மகிழ்ந்தார், ‘‘உத்தங்கா! நீ எல்லா நலங்களும் பெற்று வாழ்வாய். உன் குருகுலவாசம் நிறை வடைந்தது. கற்க வேண்டிய அனைத்தையும் கற்றுவிட்டாய்.

ஓர் ஆசிரமத்தைத் தனியே நிர்வகிக்கும் பொறுப்புணர்வும் உனக்கு வந்துவிட்டது. இனி நீ



செல்லலாம்!'' என உத்தங்கனுக்கு விடை கொடுத்தார்.தயங்கியவாறே நின்றான் உத்தங்கன். ''சுவாமி. தங்களுக்கு ஏதேனும் குருதட்சிணை கொடுக்க விரும்புகிறேன். தாங்கள் எது கேட்டாலும் தரச் சித்தமாய் இருக்கிறேன்'' என்றான்!!!

''எனக்கு எதுவும் தேவையில்லை, குழந்தாய். நான் இல்லாத காலத்தில் ஆசிரமத்தைச் சிறப்பாக நீ கவனித்துக் கொண்டதே எனக்களிக்கப்பட்ட குருதட்சிணைதான்!'' ''குருதட்சிணை கொடுத்தாலன்றி, கற்ற கல்வி ஒரு மாணவனுக்குப் பயன்படாது என்பது சாத்திரம். தாங்கள் விரும்பும் குருதட்சிணை எதுவென்று சொன்னால் மகிழ்வேன்.'' குரு யோசித்தார். பின் சொன்னார்: ''நல்லது. எனக்கு எதுவும் தேவையில்லை. என் மனைவிக்கு ஏதாவது தேவையா என்று கேள். அதைக் கொடுத்து, உன் மனமும் தட்சிணை தந்த வகையில் திருப்தி அடையட்டும்!''என்றார்

உத்தங்கன் குருபத்தினியிடம் தட்சிணையாக என்ன வேண்டும் எனக் கேட்டான். அவள் சற்று யோசித்துப் பின் சொன்னாள்: ''பௌஷ்ய மன்னனின் மனைவியிடம் விசேஷமான இரண்டு குண்டலங்கள் இருக்கிறதாம். அவை கற்புக்கரசியான அவள் செவிகளில் ஒளிவீசியவாறே ஆடுகின்றன என்கிறார்கள். அவற்றை எனக்காகக் கேட்டு வாங்கி வா! ஆனால் ஒன்று. நான்கு நாட்களில் குண்டலங்களோடு வர வேண்டும் நீ!'' என்றாள். மனைவி சொல்வதைக் கேட்ட குரு, தானும் சீடனைச் சோதிக்க விரும்பினார்.



''உத்தங்கா! என் மனைவி என்ன தட்சிணை என்பதைச் சொல்லிவிட்டாள். நான்கு நாட்களுக்குள் குண்டலங்களோடு நீ வரவில்லையென்றால், சொன்ன சொல் தவறிய உனக்கு நீ கற்ற கல்வி பயன்படாமல் போகலாம். நாலே நாட்களில் வந்துவிடுவாய் அல்லவா?'' ''நிச்சயமாக வருவேன் குருவே. உங்கள் ஆசியால் என்னால் அதை சாதிக்க முடியும்!''விடைபெற்று, பௌஷ்ய மன்னனைத் தேடிப் புறப்பட்டான் உத்தங்கன். வானிலிருந்து இந்த உரையாடலைக் கேட்ட தேவேந்திரன், உத்தமமான சீடனான உத்தங்கனுக்கு உதவ முடிவு செய்தான்!!!

உத்தங்கன் சென்ற வழியில் கம்பீரமான ஒரு மாட்டின் மீது ஒரு பெரிய மனிதர் அமர்ந்து சென்று கொண்டிருந்தார்.

ஒளிவீசும் முகம். அவரைப் பார்த்தாலே அவர் சொல்லுக்குக் கட்டுப்பட வேண்டும் என்று தோன்றியது. அவர் உத்தங்கனிடம், மாட்டின் சாணம், சிறுநீர் ஆகியவற்றைக் கலந்து சிறிது அருந்திச் செல்லுமாறு பாசத்தோடு கூறினார். நெடுந்தூரம் செல்லும் அவனுக்கு அது உடல்வலு கொடுக்கவல்லது என்றார். தான் நெடுந்தூரம் செல்வது அவருக்கு எப்படித் தெரியும் எனக் கேட்க நினைத்தான் உத்தங்கன். ஆனால் கேட்கவில்லை. அவர் சொன்னபடியே மாட்டின் சாணத்தையும் சிறுநீரையும் சிறிதளவு கலந்து உட்கொண்டான். ஆசிரமத்தில் மாட்டின் பொருட்களால் செய்யப்படும் பஞ்சகவ்யத்தை அவன்தான் அருந்தியிருக்கிறானே! கண்மூடித் தியானம் செய்தபடி அதை சாப்பிட்டுவிட்டு, விழி திறந்தவன், மாட்டையோ அதன் மேல் அமர்ந்துவந்த மனிதரையோ காணாமல் திகைத்தான்.

அவர் போயிருக்கலாம் என்று நினைத்துக் கொண்டான். தானும் வேகமாகச் சென்று பௌஷ்ய மன்னனை அடைந்தான்.

குருதட்சிணைக்கு ராணியின் குண்டலங்கள் தேவை என்று மன்னனிடம் சொன்னதும், ராணியையே அந்தப்புரத்தில் போய்ப் பார்த்துக் கேட்கச் சொன்னார் அரசர். என்ன சங்கடம்! அந்தப்புரமெங்கும் தேடித் தேடிப் பார்த்தும் அவனால் ராணியைக் காண இயலவில்லை. அரசரிடம் வந்து சொன்னதும் அரசர் நகைத்தார்!!!

ராணி மகாபதிவிரதை என்றும் குளித்துத் தூய்மையாகச் சென்றால்தான் அவள் தரிசனம் கிட்டும் என்றும் சொன்னார். அதன்படி உத்தங்கன் நீராடி, அந்தப்புரம் சென்றபோது, தாய்மைக்கே உரிய கனிவோடு அவனை வரவேற்றாள் அரசி.

அவன் சொன்னதனைத்தையும் கேட்ட அவள், ''குழந்தாய், உத்தங்கா! குண்டலங்கள் விசேஷமானவைதான்.

ஆனால் அவை வெறும் அலங்காரம்தானே அன்றி அவற்றால் என்ன பயன்? தர்மத்தை அனுசரிப்பதால் வரும் சாந்தியை இந்த வெற்று அலங்காரப் பொருள் எங்கே தரப் போகிறது?

உணவால் நா தித்திக்கிறது.

ஆனால் குண்டலங்களை அணிவதால் காது தித்திக்கிறதா என்ன? காதுக்கு என்ன சுகம் கிடைக்கிறது? எனக்குக் குண்டலங்கள் மேல் அக்கறை எதுவும் இல்லை! உனக்கு அவை குருதட்சிணையாகப் பயன்பட்டால் அதைவிட எனக்கு மகிழ்ச்சி வேறில்லை!'' என்று சொன்ன ராணி, அவற்றைக் கழற்றி உத்தங்கனின் கைகளில் வைத்தாள்.குண்டலங்களின் ஸ்பரிசம் பட்டதும் உத்தங்கனின் உள்ளங்கை குளுமை பெற்றது. குண்டலங்களின் ஒளியால் அந்தப் பிரதேசமே வெளிச்சமடைவதைப் பார்த்து உத்தங்கனிடம் வியப்பு ஏற்பட்டது. ராணி செய்த உபகாரத்திற்கு நன்றி தெரிவித்து அவன் விடைபெற்றபோது, இந்தக் குண்டலங்களின் மேல் பலருக்குக் கண் இருக்கிறது என்றும் அவன் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது மிக அவசியம் என்றும் அறிவுறுத்தினாள் ராணி. அவன் ஆசிரமம் நோக்கி நடக்கத் தொடங்கியபோது, தன்னை மனித உருவில் தட்சகன் என்கிற நாகம் தொடர்வதை அவன் கவனிக்கவில்லை!!!

குண்டலங்களை ஒரு மரத்தடியில் வைத்து விட்டு, குளத்தில் முகம் கழுவி இறைவனைப் பிரார்த்தித்து, பின் மீண்டும் தன் பயணத்தைத் தொடர எண்ணி மரத்தடிக்கு வந்தான். என்ன ஆச்சரியம்! குண்டலங்களைக் காணோம்.

பதறிப்போய்ச் சுற்றுமுற்றும் பார்த்த போது ஒருவன் கையை மூடிக்கொண்டு ஓடுவதும் அவன் கைவிரலின் இடுக்குகளிலிருந்து ஒளி கசிவதும் உத்தங்கனின் கண்களில் பட்டன. சந்தேகமில்லாமல் அவன்தான் குண்டலங்களைத் திருடியிருக்கிறான்.

வேகமாக ஓடினான் உத்தங்கன். ஆனால், அவனோ நாகமாக மாறி குண்டலங்களுடன் குளக்கரையில் இருந்த ஒரு பொந்தில் நுழைந்து பாதாள உலகத்திற்குச் சென்றுவிட்டான்.

இனி என்ன செய்வது? உத்தங்கன் திகைத்தவாறு ஒரு குச்சியை எடுத்து அந்தப் பாம்பு சென்ற பள்ளத்தைத் தோண்டிப் பார்க்கலானான். மறுகணம் அவனருகே தொப்பென்று ஏதோ வந்து விழும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் அது ஓர் ஆயுதம்.அந்த ஆயுதத்தால் பள்ளத்தைத் தோண்டலானான். கிடுகிடுவென்று பள்ளம் பெரிய சுரங்கப் பாதையாக உருவாகிக் கீழ்நோக்கிச் சென்றது. அதில் வேகமாக ஓடினான். பாதை அவனை மிக விரைவில் நாக உலகத்திற்குக் கொண்டு விட்டது. அங்கே கறுப்பு, வெள்ளை நூல்களால் இரண்டு பெண்கள் ஆடை நெய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் யார் என்று தெரியவில்லை. ஒரு கணம் கூட நிறுத்தாமல் அவர்கள் கறுப்பு நூலாலும் வெள்ளை நூலாலும் மாற்றி மாற்றி நெய்துகொண்டே இருந்தார்கள்!!!

அவர்கள் அருகே பன்னிரண்டு ஆரம் கொண்ட ஒரு பெரிய சக்கரம் இருந்தது. அது நிற்காமல் சுழன்றுகொண்டே இருந்தது. இவர்கள் நெய்வதற்கும் அந்தச் சக்கரங்கள் சுழல்வதற்கும் இடையே ஏதோ ஒரு தொடர்பிருந்தது போல் தோன்றியது உத்தங்கனுக்கு.

அவர்கள் அருகே ஒரு குதிரையும் ஒரு மனிதனும் தென்பட்டார்கள். அந்த மனிதனிடம் எனக்குக் குண்டலங்கள் வேண்டும் என்று கேட்டான் அவன். ''அவற்றை நாகராஜன் கவர்ந்து கொண்டு இந்தப்புறம் ஓடியதைப் பார்த்தேன். உனக்குக் குண்டலங்கள் கிடைக்க ஒரே வழி, இந்தக் குதிரையின் பின்புறத்தை ஓங்கி உதைப்பதுதான்!'' என்றான் அவன்! குதிரையின் பின்புறத்திற்கும் பெண்கள் காதில் அணியும் குண்டலத்திற்கும் என்ன சம்பந்தம் என்று உத்தங்கனுக்குப் புரியவில்லை. ஆனாலும் அவன் சொன்னபடி, வலிமையை எல்லாம் திரட்டி, குதிரையின் பின் புறத்தில் ஓங்கி ஓர் உதைவிட்டான்.




அடுத்த கணம் குதிரையின் மயிர்க் கால்களிலிருந்து பெரும் புகையும் நெருப்பும் எழுந்து நாக உலகம் முழுவதையும் சூழ்ந்துகொண்டது. இதைக் கண்டு அதிர்ச்சியும் அச்சமும் அடைந்த

தட்சகன் என்ற நாகம் உயிர் பிழைத்தால் போதும் என்று குண்டலங்களை உத்தங்கனிடம் திருப்பிக் கொடுத்து மன்னிப்பு வேண்டியது.

குண்டலங்கள் கைக்கு வந்தும்கூட உத்தங்கன் கடும் வருத்தத்தில் ஆழ்ந்திருந்தான்.அவன் ஏன் வருந்துகிறான் என்று அன்போடு கேட்டான் குதிரையின் அருகே இருந்த மனிதன். ஆசார்யர் வைத்த கெடுவில் இன்னும் ஐந்தே நிமிடங்கள்தான் மீதமிருக்கிறது என்றும் அதற்குள் தான் ஆசிரமம் செல்ல இயலாதென்பதால் வருந்துவதாகவும் சொன்னான் உத்தங்கன்!!!

‘‘இது சாதாரணக் குதிரை அல்ல. காலக் குதிரை. இதில் ஏறி இதன் கழுத்தைப் பிடித்து அமர்ந்துகொள். செல்ல வேண்டிய இடத்தை மனத்தால் நினைத்துக் கொள். மறுகணம் குதிரை உன்னை அங்கே கொண்டுவிடும்!’’ என்றான் அந்த மனிதன். அப்படியும் நடக்குமா? ஆச்சரியத்தோடு உத்தங்கன் குண்டலங்களைக் கைகளில் வைத்து மூடிக்கொண்டு குதிரை மேல் தாவி ஏறித் தான் கல்வி கற்ற ஆசிரமத்தை நினைத்துக் கொண்டான்.

மறுகணம் குதிரை ஆசிரம வாயிலில் இருந் தது! அவனை அங்கே இறக்கிவிட்ட அது ஒரே பாய்ச்சலாகத் தான் வந்த இடத்திற்குத் திரும்பி விட்டது! குருதேவரும் அவர் மனைவியும் காலக்கெடுநெருங் குவதால், அவன் உரிய நேரத்தில் வந்து சேர வேண்டுமே எனக் கவலையோடு காத்திருந் தார்கள்!!!



அவர்களை வணங்கிய உத்தங்கன் குண்ட லங்களை குருபத்தினியின் கரங்களில் சமர்ப் பித்தான். ஆசார்யர் அவனைப் பிரியத்தோடு வாழ்த்தினார்.

‘‘கடவுள் அருளாலும் உங்கள் ஆசியாலும் பல இடையூறுகளைக் கடந்து குண்டலங்களை உரிய நேரத்திற்குள் கொண்டுவந்து விட்டேன். ஆனால் வழியில் நடந்தவை எல்லாம் மர்மமாக இருக்கின்றன!’’ என்று நடந்த அனைத்தையும் சொல்லி குருநாதரிடம் விளக்கம் கேட்டான் உத்தங்கன். அவர் சிரித்தவாறே விளக்கம் சொன்னார்.

‘‘குழந்தாய்! மாட்டின் மீது வந்த பெரியவர் இந்திரன். அவர் உனக்குத் தந்தது அமிர்தம். உன் குருபக்தியை மெச்சித் தரப்பட்ட பரிசு அது. அதை அருந்தியிராவிட்டால் நாக உலகத்தின் கடும் விஷத்திலிருந்து நீ எப்படித் தப்பித்திருக்க முடியும்? நாக உலகத்தை அடைவதற்குப் பள்ளம் தோண்டினாயே?

அப்போது உன் அருகே வந்து விழுந்த ஆயுதம் இந்திரனின் வஜ்ராயுதம்.

அதனால்தான் ஒரு சிறிய பொந்தை உடன டியாக ஒரு சுரங்கப் பாதையாக உன்னால் தோண்ட முடிந்தது. கீழ் உலகில் கறுப்பு வெள்ளை நூல் களால் ஆடை நெய்த இளம்பெண்கள் இருவரைக் கண்டாய் அல்லவா? அவர்கள் கடவுளின் பணிப்பெண்கள். இடைவிடாமல் வெள்ளை நூலால் பகலையும் கறுப்பு நூலால் இரவையும் தொடர்ந்து நெய்துகொண்டே இருக்கிறார்கள். அவர்களால்தான் இரவும் பகலும் மாறி மாறி வருகின்றன. அவர்களின் அருகே பன்னிரண்டு ஆரங்களோடு சுற்றிக் கொண்டிருந்த சக்கரம்தான் காலச் சக்கரம். அந்த ஆரங்கள் பன்னிரண்டு மாதங்களைக் குறிப்பவை.

அங்கே அமர்ந்திருந்த மனிதன் காலதேவன். குதிரை, சக்தியின் குறியீடு. சக்தியோடு வேலை செய்தால் குறிப்பிட்ட காலத்திற்குள் ஏராளமான வேலை செய்து ஜெயிக்க வேண்டியதை யாரும் ஜெயி க்கலாம். இதோ நீ ஜெயித்ததைப் போல.’’ குருதேவரும் குருபத்தினியும் அவன் தலைமீது கைவைத்து ஆசீர்வதித்தார்கள். வானுலகிலிருந்து உத்தங்கன் மேல் மலர்மாரி பொழிந்தது.

(குருபக்தியின் மகிமையை விளக்கும் இக்கதை மகாபாரதத்தில் ஆதி பர்வத்தில் சொல்லப்பட்டுள்ளது.)

ஆன்மிகமலர்

# எல்லாம் கிடைக்க பெற்றவர் ஆக

நீங்கள் உள்ளே சுவாசிக்கும் மூச்சு **வாழ்வை ஒத்தது ...**
நீங்கள் வெளியே விடும் மூச்சு **இறப்பை ஒத்தது ...**
இந்த இரண்டுக்கும் இடையே உள்ள ...
இடைவெளி மிகவும் குறைவானது ...
அந்தக் கணத்தில் மூச்சு நிற்கிறது ...
ஆனால் இந்தக் கணம் நீங்கள் ஒருபோதும் அதை ...
கவனிக்க முடியாத அளவு சிறியதாக இருக்கிறது ..
ஆனால் உன்னிப்பான கவனமான ஆழ்ந்த விழிப்புணர்வு மூலம் ...
நீங்கள் அந்த இடைவெளியை
அந்த அனுபவத்தை உணர முடியும் ...
அந்த அனுபவத்தை உணர்வதற்கு
முயற்சி செய்யுங்கள் ...
அந்த அனுபவம்தான் சத்தியம் உண்மை
பிறப்பும் இறப்பும் இல்லாத அந்த ஒன்றை ...
எப்பொழுதும் அழிவற்று இருப்பதை அறிந்து கொள்ளுங்கள் ...
உங்கள் மூச்சு இயல்பாக உள்ளே வருவதையும் ...
வெளியே போவதையும் பற்றிய விழிப்புணர்வுடன் இருங்கள் ...
மூச்சும் உங்கள் உணர்வும் ஒன்றாகிவிட வேண்டும் ...
நீஙகள் மூச்சோடு நுட்பமாக உணர்வோடு நகர்ந்து ...
செல்லும்போது மூச்சு இல்லாத அந்த நிலையையும் ...
உங்களால் உணராமல் போக முடியாது
அந்த நிலையில் நீங்கள் எல்லாம்
கிடைக்கப் பெற்றவர் ஆகலாம் ...

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



# காசியில் ஒரு கேதார்நாத் கேதாரேஸ்வரர் ஆலய சிறப்பு

e-magazine
aanmeegamalar.com




## கேதாரேஸ்வரர்

பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களில் ஒன்றான கேதாரேஸ்வரர் இமயமலையில் உள்ள ஒரு சிவன் கோயிலாகும். காசி காண்டத்தின் கூற்றுப்படி, உஜ்ஜயினியில் வசிஷ்டர் என்ற தனது மகனின் உபநயனம் விழாவை ஒரு பெரியவர் செய்தார். சிறுவன், வசிஷ்டர், மிகவும் ஆன்மீக பற்று கொண்டவர் மற்றும் லிங்க பூஜை உட்பட அனைத்து பூஜைகளையும் செய்தார். அவர் தனது குருவுடன் இமயமலையில் உள்ள கேதாரேஸ்வரர் கோவிலுக்கு தவறாமல் சென்று கேதாரேஷ்வரரைப் பூஜை செய்து வந்தார்.

ஒருமுறை, கேதாரேஸ்வரர் செல்லும் வழியில், குரு துரதிர்ஷ்டவசமாக இறந்தார், அவர் நல்ல செயல்களை மட்டுமே செய்து வந்ததால், அவர் கைலாஸ் மலையில் தனக்கென ஒரு இடத்தைக் கண்டுபிடித்தார். அப்போது 12 வயதாகும் வசிஷ்டருக்கு, கேதாரேஸ்வரரை தரிசனம் செய்ய செல்பவர்களுக்கு சகல புண்ணியங்களும் கிடைக்கும் என்ற ஞானம் கிடைத்தது. பிறகு காசிக்குச் சென்று குடியேறினார்.

ஆன்மிகமலர்.காம்

ஆனால் அனைத்து சைத்ர மாத பூர்ணிமா நாட்களிலும் (மார்ச் 20ஏப்ரல் 21), வசிஷ்டர் (பிரம்மச்சாரியாக இருந்தவர்





இமயமலையில் உள்ள கேதாரேஸ்வரர் லிங்கத்தை தரிசிப்பது வழக்கம், இது 61 ஆண்டுகள் நீடித்தது. ஆனால் வயது முதிர்வு காரணமாக வெளியில் செல்ல முடியாமல் காசியில் சிவனை வழிபடத் தொடங்கினார். சிவபெருமான் அவரை ஒரு விருப்பத்துடன் ஆசீர்வதித்தார் மற்றும் வசிஷ்டர் சிவபெருமான் தயவுசெய்து காசி யில் கேதாரேஸ்வரராக தோன்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்..

சிவபெருமான் வசிஷ்டரின் நேர்மை மற்றும் பக்தியால் ஆனந்தம் அடைந்தார். அவர் காசியில் கேதாரேஸ்வரராக தோன்றி, இமய மலையில் உள்ள கேதாரேஷ்வரில் பூஜை செய்வதை விட காசியில் கேதாரேஷ்வரில் பூஜை செய்வது ஏழு மடங்கு பெரிய புண் ணியத்தை அளிக்கும் என்று வசிஷ்டரிடம் கூறினார் காசி காண்டம், அத்தியாயம் 77).

கௌரி குண்டம், ஹன்ஸ் தீர்த்தம் மற் றும் மானசரோவர் தீர்த்தம் ஆகியவை கேதாரேஷ்வரைக் குறிக்கும் வகையில் காசி காண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இப்போது கௌரி குண்டம் மட் டுமே உள்ளது. மானசரோவர் மற்றும் ஹன்ஸ் தீர்த்தம் வறண்டு விட்டன.

பக்தர்கள் சைத்ர மாதம் (மார்ச் 20ஏப்ரல் 20) கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியில் விரதம் (விரதம்) அனுசரித்து, கேதாரேஸ்வரரின் பூஜை செய்த பிறகு மறுநாள் பூர்ணிமா நாளில் தங்கள் விரதத்தை கைவிடுகிறார்கள். இது காசி காண்டத்தில் கூறப்பட்டுள்ளது, அங்கு வசிஷ்டர் கேதாரேஸ்வரரை சைத்ர பூர்ணிமா நாட்களில் (மேலே குறிப்பிட்டுள்ளபடி) பிரார்த்தனை செய்தார்.

லிங்க புராணத்தின்படி, இந்த லிங்கத்தின் தீவிர பக்தர்கள் கடவுளுக்கு சமமானவர்களாக மாறுவார்கள். கேதார் கோயிலில் பக்தர்கள் ருத்ரம் ஓதுவது மிகவும் நன்மையை தரும் என்று நம்பப்படுகிறது.

காசி மாநகரம், ஓம்கார கண்டம், விஸ்வேஷ்வர கண்டம் மற்றும் கேதார கண்டம் என மூன்று கண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. காசியில் இறந்தவர் முக்தி அடைவார் என்பது நம்பிக்கை ஒரு

e-magazine
aanmeegamalar.com

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.



படி மேலே சென்று, கேதார் கண்டத்தில் உள்ள பகுதியில் ஒருவர் இறந்தால், அவர் உடனடியாக முக்தி பெறுகிறார்.

ஜி அகில இந்திய அடிப்படையில் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்கள் உள்ளன. மற்றும் காசியில் பன்னிரண்டு முக்கியமான சிவலிங்கங்கள் உள்ளன. அவை மேற்கூறிய பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களைக் குறிக்கின்றன. கேதாரேஸ்வரர் (வாரணாசி) கேதாரேஸ்வரர் ஜோதிர்லிங்கம் (உத்தரகாண்ட்) என்று வணங்கப்படும் ஒரு சக்தி வாய்ந்த லிங்கம்.

## கோவிலின் இடம்

கேதாரேஸ்வரர் கோவில் ங6/102, கேதார் காட் என்ற இடத்தில் அமைந்துள்ளது. பக்தர்கள் சைக்கிள் ரிக்ஷா, கார் அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் சோனார்புரா என்ற இடத்திற்குச் வந்து சந்துகள் வழியாக இங்கு வரலாம்.

மாற்றாக, மக்கள் படகில் கேதார் காட் சென்று நேரடியாக கோவிலுக்குள் படிக்கட்டுகள் ஏறி செல்லலாம்.

## பூஜைகளின் வகைகள்

ஆலயம் காலை 04.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை வழிபாட்டிற்காக திறந்திருக்கும். அதிகாலை 04.00 மணிக்கு மங்கள ஆரத்தியும், காலை 10.00 மணிக்கு 2வது ஆரத்தியும், மாலை 05.30 மணிக்கு 3வது ஆரத்தியும் செய்யப்படுகிறது, மற்றும் 10.30 மணிக்கு ஷயன் ஆரத்தி.

முக்கிய நாட்கள் ஏகாதசி, பிரதோஷம் மற்றும் பூர்ணிமா நாட்கள். ஆண்டுக்கு ஒருமுறை அன்ன அபிஷேகம் நடைபெறும். இந்த சடங்கில், சிவலிங்கம் சாதத்தால் மூடப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் கங்கையில் ஸ்நானம் செய்வதும், கேதாரேஸ்வரருக்கு



பூஜை/அபிஷேகம் செய்வதும் மிகவும் மங்களகரமானது.

சிராவண மாதத்தின் (ஜூலை 23 முதல் ஆகஸ்ட் 20 வரை) திங்கட்கிழமைகளிலும், மிக முக்கியமாக அந்த மாதத்தின் கடைசி திங்கட்கிழமையிலும் பூஜைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கேதார்காட்டில் செவ்வாய் கிழமை வரும் அமாவாசை அன்று ஸ்ரார்த்த கர்மங்கள் செய்வது மிகவும் புனிதமானது என்று நம்பப்படுகிறது.

இக்கோயிலில் நடைபெறும் பூஜைகளை தமிழகத்தைச் சேர்ந்த குமாரசாமி மடம் செய்து வருகிறது. விசேஷ பூஜை முதலியன செய்வதற்கு முன் பூஜாரியிடம் ஆலோசனை பெறுவது நல்லது. – காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்

தொலைபேசி எண்: 9839061178

e-magazine
aanmeegamalar.com

கீதாசமையல்

# gsspecialfood

ஆன்லைன் இயற்கை உணவுப்பொருள் அங்காடி




**சத்துமாவு**
41வகை தானியங்களில் தயாரிக்கப்பட்டது
250 கிராம் ரூ.180

**நலங்கு மாவு**
35 வகை மூலிகைகளில் தயாரிக்கப்பட்டது (பெண்கள் மட்டும்)
200 கிராம் ரூ.200

**கருப்பு உளுந்து கஞ்சிமாவு**
250 கிராம் ரூ.140




**வல்லாரை கீரை இட்லிபொடி**
100 கிராம் ரூ.70

**கறிவேப்பிலை இட்லிபொடி**
100 கிராம் ரூ.50

**தூதுவளை கீரை இட்லிபொடி**
100 கிராம் ரூ.70

**கொள்ளு இட்லிபொடி**
100 கிராம் ரூ.50

**முடக்கத்தான் கீரை இட்லிபொடி**
100 கிராம் ரூ.70

மேற்கண்ட பொருட்கள் தேவைப்படுபவர்கள் கீழ்காணும் வாட்சப் எண்ணில் மெசேஜ் செய்து பெற்றுக்கொள்ளவும்

## 7550199561

தரமாக, சுத்தமாக, கலப்படமின்றி தயாரிக்கப்பட்டது. எந்தவித இரசாயண கலவையும் பயன்படுத்தாமல் தயாரிக்கப்பட்டது

(பூண்டு சேர்க்காமல் தயாரிக்கப்பட்டது)

# இந்து மத சடங்குகள் சாயம் பூசப்பட்டு உருமாற்றம் அடைகிறது

முன்னோர்களை வழிபடும் இந்து மதத்தவரின் நம்பிக்கை பயத்தின் அடிப்படையில் எழுந்தது அல்ல நன்றி உணர்ச்சியின் காரணமாகவே உதையமனது என்று இந்து மத வரலாற்றில் தொடர்ச்சியாக மூன்று பதிவுகளை நான் வெளியிட்ட போது அதில் மூன்றாவது பதிவுக்கு அன்பான வாசகர் ஒருவர் பெற்றோர்கள் பெற்றோர் களாக நடக்காத போது அவர்களுக்காக திதி திவசம் என்று கொடுப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது எனவே கொடுமையான பெற்றோர் களை நினைத்து பார்ப்பதை விட மறந்துவிடுவது நல்லது என்ற வகையில் ஒரு கருத்தை பதிவு செய்திருந்தார் அவரது எழுத்தை முழுமை யாக படித்த போது மிருகங்கள் கூட செய்ய தயங்குகின்ற செயல்களை மனிதனாக பிறந்தவன் செய்கிறான் அவனை திருத்துவதற்கு அல்லது அவனிடமிருந்து விடுதலை பெறுவதற்கு வேறு வழியே இல்லையா? என்ற அடிப்படையான கருணை உணர்ச்சி மேலோங்கி இருந்ததை உணர முடிகிறது. ஆனாலும் கூட அந்த வாச கரின் கருத்துக்களோடு என்னால் முழுமையாக உடன்பட்டு போக முடியவில்லை.

ஆனால் என்னவோ தெரியவில்லை நமது சமூதாயத்தை பொருத்தவரை சில விதிவிலக்கு களை முன்னுதாரணமாக வைத்து கொண்டு விதி என்ற ஒழுங்கையே விமர்சனம் செய்ய துவங்கி விடுவது அதிகரித்து வருகிறது. இதை இங்கே நான் சொல்வதற்கு மிக முக்கியமான கரணம் இருக்கவே செய்கிறது.

இந்த உலகில் பல நாடுகள் இருக்கின்றன ஒவ்வொரு நாட்டிலும் அதனதன் பண்பாட்டை சார்ந்த பண்டிகைகள் கொண்டாடப்பட்டு வருகின் றன கிறிஸ்தவ மக்களும் இஸ்லாமிய மக்களும் உலகில் பல பகுதிகளில் பரவலாக வாழ்வதனால் அந்த சமயங்களை சார்ந்த பண்டிகைகள் உலக சமய திருவிழாவாகவே கடைபிடிக்க படுகிறது. அந்த சமய திருவிழாக்களாக இருக் கட்டும் அல்லது இந்துசமயம் சாராத எந்த திருவிழாவாக இருந்தாலும் அவைகள் தொன்றுதொட்டு வருகின்ற சமய விழாக்கள் என்றே பலரும் கருதுவார்கள் ஆனால் இந்துசமய பண்டிகைகள் என்று வரும்போது மட்டும் தேவையில்லாத பல விமர்சனங்கள் எழுவதை இந்தியாவில் மட்டுமல்ல உலகத்தில் உள்ள எல்லா மூலைகளிலும் எதி ரொலிப்பதை காணலாம்.

**கடவுள் உருவாக்கிய மதம்**



உதாரணமாக வல்லரசு நாடுகளும் மற்றும் சில குட்டி நாடுகளும் தங்களுக்கு எதிரான குழுக்களின் மீது ஆயுத பிரயோகம் செய்யும் போது பயன்படுத்தும் நச்சு இரசாயண பொருள்களை பற்றி அதிகமான வியாக்கியானங்களை காண முடியாது.

அதே போல பெரிய தொழில்சாலைகளிலிருந்து வெளியில் வருகின்ற இரசாயன கழிவுகளை பற்றி யாரும் கவலைப்படுவது கிடையாது ஆனால் சில நாட்கள் மட்டுமே கொண்டாடபடுகின்ற தீபாவளி பண்டிகையில் பட்டாசு வெடிப்பதை

பற்றி மனிதாபிமானத்தோடு பேசுவதாக பாசாங்கு செய்து பலரும் கருத்துக்களை பதிவு செய்வார்கள்.

விஜயதசமி காலங்களில் காளிமாதா சிலைகளையும் விநாயகர் சதுர்த்தி காலங்களில் பிள்ளையார் சிலைகளையும் நீரில் கலக்கும் போது மட்டுமே சிலர் சுற்று சூழலை பற்றி கவலைபடுவார்கள். ஆனால் அவர்களுக்கு ஆலைகளிலிருந்து வெளிவருகின்ற கழிவுநீர் தினசரி நீர்நிலைகளை விஷமாக்குவதை எதிர்த்து பேசுவதற்கு துணிச்சல் வராது. இதெற்கெல்லாம் காரணங்கள் இல்லாமல் இல்லை.

ஒருசமயம் தலித் அமைப்பைசார்ந்த தலைவர் ஒருவர் ஒரு தொலைக்காட்சி நேர்காணலில் இந்துமதத்தில் மட்டுமே ஜாதி பிரிவுகளும் ஜாதி வன்கொடுமைகளும் இருக்கிறது எனவே இந்து மதத்தை இல்லாமல் செய்துவிட்டால் சமூகத்தில் உள்ள ஜாதி மோதல்களை ஏற்ற தாழ்வுகளை நிறுத்திவிடலாம் என்று கருத்து சொன்னார். அவர் மட்டுமல்ல அவரை போன்ற கருத்துடைய பலரையும் நாம் அன்றாடம் காணமுடியும். இவர்கள் அனைவருமே தங்களது மனிதாபிமானத்தையும் மனித சேவையையும் விளம்பர படுத்திக்கொள்ள தாக்குவதற்கு மிக சுலபமான இலக்காக இந்து மதத்தை எடுத்து கொள்கிறார்கள். இவர்களது கருத்துக்களை உன்னிப்பாக பார்க்கும் போது உலகத்தில் நடக்கின்ற அனைத்து கொடுமைகளுக்கும் ஒரே கூடாரமாக இருப்பது இந்து மதம் மட்டுமே என்ற மாய தோற்றம் நிஜமானது போல பலருக்கும் தெரியும்.

நம் நாட்டில் உள்ள பல அறிவு ஜீவிகள் இந்து மதத்திற்கு எதிரான கருத்துக்களை பரப்புவதிலேயே அதிக கவனம் செலுத்துபவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அறிவு ஜீவிகளுக்கே அதிக முக்கியத்துவம் வெகுஜன ஊடகங்களால் கொடுக்க படுகிறது. விளம்பர வெளிச்சம் இவர்கள் மீதே அதிகமாக படுகிறது. இதற்கு காரணம் என்ன? இந்தியாவை பற்றி இந்திய பண்பாட்டை பற்றி இந்திய வரலாற்று சுய சிறப்புகளை பற்றி எடுத்து கூறுபவர் களை பின்னுக்கு தள்ளி எதிர்மறையான கருத்தாளர் களை முன்னிறுத்த வேண்டிய அவசியம் என்ன?

என்ற கேள்விகள் நமக்கு அவ்வபோது தோன்றினாலும் அதற்க்கான சரியான விடைகள் பலநேரம் கிடைப்பது இல்லை நாமும் அதை பற்றி கவலைபடுவதும் இல்லை. அத்தகைய கவலை இல்லாமையே நம்முடைய தாழ்மைகள் பலவற்றுக்கு காரணமாக அமைந்து விடுகிறது.

சென்ற சில நூற்றாண்டுகளில் பலம்பொருந்திய நாடுகள் பலவீனமான நாடுகளையும் குழப்பங்கள் மிகுந்த நாடுகளையும் அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் அடிமைபடுத்தி தங்களது ஆட்சிக்கு உட்படுத்தி கொள்வது வழக்கமாக இருந்தது தன் சொந்த நாட்டை திறம்பட நிர்வாக செய்வதில் காட்டாத அக்கறையை மற்ற நாடுகளை பிடிப்பதில் வல்லரசு நாடுகள் காட்டியதற்கு மிக முக்கிய காரணம் பொருளாதார சுரண்டலே ஆகும். அடிமைப்பட்ட நாட்டிலுள்ள அனைத்து வளங்களையும் தங்களது நாட்டுக்கு கொள்ளையடித்து எடுத்து செல்வதை சட்டபூர்வ மாகவே அவர்கள் செய்தார்கள். பல நேரங்களில் இத்தகைய இராணுவ நடவடிக்கைகளுக்கு அதிகளவில் பொருள் சேதமும் உயிர் சேதமும் ஏற்படுவதாலும் வெற்றி தோல்வி என்பது மதில் மேல் பூனையாக இருப்பதாலும் அதற்கு மாற்று வழிகளை அந்த அரசுகள் யோசனை செய்தன.

அந்த யோசனையின் விளைவாக அவர்கள் செய்த முடிவின் அடிப்படையில் தங்களை ஜனநாயக பாதுகாவலர்களாக காட்டி கொண்டு அடிமை நாடுகளுக்கு சுதந்திரம் கொடுத்து வெளியேறினார்கள். தாங்கள் வெளியேறி விட்டாலும் தங்களுக்கு வருகின்ற லாபம் குறைவில்லாமல் வரவேண்டும் அதற்காக அடிமை நாடுகள் எப்போதுமே தங்களது நாட்டாண்மைகளை எதிர்பார்த்து இருக்க வேண்டும் என்பதற்காக சாதிரீதியான பல பிரிவினைகளை விதைத்து தீராத மோதல்களை உருவாக்கி விட்டு சென்றார்கள். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்ற கணக்கே அவர்களது அரசியல் கணக்காக இருந்தது. இதனால் அடிமை நாடுகளில் இல்லாத பொய்களை இருப்பது போலவும் ஆதார பூர்வமானது வரலாற்று ரீதியிலானது என்பது போலவும் சித்திகரிக்க சில கருத்துக்களை திட்டமிட்டே மிக ஆழமாக விதைத்தார்கள். அந்த கருத்து மோதல்களே மனமோதல்களாக வளர்ந்து தீராத சச்சரவுகளை இன்றும் ஏற்படுத்தி கொண்டிருக்கிறது.

உதாரணத்திற்கு சொல்வது என்றால் இன்று இலங்கையில் வாழுகின்ற சிங்கள மக்களும் தமிழ் மக்களும் மோதி கொள்வதை சொல்லலாம். சிங்கள தமிழ் இனவாதிகளின் உற்பத்திக்கு மூலகாரணம் என்னவென்று அறிந்து கொள்ள வேண்டுமென்றால் பக்கம் சாராத வரலாற்று சிந்தனையோடு இலங்கையின் அரசியல் ஏடுகளை புரட்ட வேண்டும். இந்தியாவில் உள்ள

இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஆயிரம் மனகசப்புகள் இருந்தாலும் கூட பெருவாரியான பொதுஜனங்கள் எப்படி ஒற்றுமையோடு சகஜமாக வாழ்கிறார்களோ அப்படியே தான் ஒருகாலத்தில் இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் வாழ்ந்தார்கள் இவர்களுக்கிடையில் தீராத பகைமையை உருவாக்க திட்டமிட்டே பிரிட்டிஷ் அரசாங்கம் சில காய்களை நகர்த்தியது இதன் காரணமாக ஆள்வதற்கான தகுதி தனக்கு மட்டுமே உள்ளதென்று சிங்களவர்களும் தாங்கள் புறக்கணிக்க படுவதாக தமிழர்களும் நம்பினார்கள்.

இந்த நம்பிக்கையின் விரிவாக்கமே இன்று அந்த நாடு கொதித்து போன அணுவுலையாக கிடக்கிறது.

இந்தியாவிலும் மறைந்து கிடந்த இந்து முஸ்லிம் மோதல்களுக்கு தூபம் போட்டு தூண்டியது வெள்ளைக்காரர்களின் ஆட்சியே அதுமட்டும் அல்ல தென்னிந்தியாவில் திட்டமிட்டு ஆரிய திராவிட மாயையை ஏற்படுத்தி வடக்கிற்கும் தெற்கிற்கும் மனரீதியான பிளவுகளை ஏற்படுத்தி வைத்தார்கள்.

இதன் காரணமாக தென்னிந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் திராவிடர்கள் என்ற போலியான வரலாற்று ஆதாரம் உண்மையானதாக உருபெற்று விட்டது. இந்த போலி சங்கதியை முன்னிறுத்தி பல அரசியல் சக்திகளும் வளர்ந்து விட்டன. இவர்கள் தங்களை வளர்த்தி கொள்ள பல வகையிலும் பேதங்களை உருவாக்கி கூர்மை படுத்தினார்கள்.

அதன் விளைவாக இந்து மதத்திற்கும் திராவிடர்களுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது இந்து மதம் வேறு திராவிட மதம் வேறு என்ற கருத்து பரவலாக நம்பபட துவங்கி விட்டது. இந்தியாவை பிளவுபடுத்த வேண்டுமென்றால் மதத்தை கைவைத்தால் தான் முடியுமென்று ஆதிக்க சக்திகளுக்கு நன்றாக தெரியும். பிளவுபட்ட இந்திய சமூகம் தனக்குள் மோதிகொள்கிற காலம்வரையில் தங்களது அரசியல் பொருளாதார அறுவடைகளை நன்றாகவே செய்யலாம் என்ற கணக்கும் பலித்துவிட்டது. இந்தியாவை பிரித்தாளுவதில் அன்றைய பிரிட்டிஷ் அரசுக்கு லாபம் இருந்தது என்றால் இன்றைய அமெரிக்க சீன அரசுகளுக்கும் அதே ஆதாயம் இருக்கிறது. இந்திய மக்கள் ஒருமைப்பட்டு விட்டால் தங்களது மகசூல் பெருமளவு பாதிக்கப்பட்டுவிடும் என்ற எண்ணத்தில் நமக்குள் இருக்கும் பிரிவினை எண்ணத்தை நெய்வார்த்து வளர்த்து கொண்டிருக்கின்றன அந்நிய சக்திகள்.



பிரிவினை சக்திகளை ஊக்குவித்தல் என்றவுடன் தீவிரவாத சிந்தனை உடைய இளைஞர்களை ஒருங்கிணைத்து அவர்கள் கையில் ஆயுதமும் பணமும் கொடுத்து இந்தியா முழுவதும் ஆங்காங்கே வன்முறை நிகழ்வுகளை அரங்கேற்றுதல் என்று மட்டுமே நம்மில் பலர் நினைத்து கொண்டிருக்கிறோம் பிரிவினை என்பது பௌதிகமாக மட்டுமே இருப்பது அல்ல கண்ணுக்கு தெரியாத வகையிலும் பிரிவினையை உருவாக்கலாம் நேற்றுவரை அண்ணன் தம்பிகளாக இருந்தவர்கள் மத்தியில் திட்டமிட்டு வேற்றுமையை உருவாக்குவது கண்ணுக்கு தெரியாத ஒருவித பிரிவினை செயல் என்றால் இன்று காலை வரையிலும் நான் இந்த சொத்து என்னுடையது எனக்கே பாத்தியதை பட்டது எனது முன்னோர்கள் காலகாலமாக கடும்பாடு பட்டு உழைத்து எனக்கென்று விட்டு சென்றது என்று நம்பிகொண்டிருந்ததை இது உனது முன்னோர்கள் சொத்து அல்ல நாங்கள் அவர்களுக்கு கொடுத்தது அந்த சொத்தின் உண்மை சொந்தகாரார்கள் நாங்களே எனவே நீ அனுபவிப்பது முழுமையாக எங்களுடையது என்ற ஒரு அவநம்பிக்கையை யாரவது ஏற்படுத்தினால் என் மனநிலை என்னவாகும்? நாளாவட்டத்தில் எனது சுயத்திலிருந்த நம்பிக்கையும் கௌரவமும் தளர்ந்து போய் சிறுது சிறிதாக அந்நியர் வசம் என்னை இழந்துவிடுவேன். இத்தகைய வேலை நமது நாட்டில் வெகு நாட்களாகவே நடந்து வருகிறது.

சிறிது நாட்களுக்கு முன்பு கிருஸ்தவபாதிரிமார்களால் இந்து மத சடங்குகள் சிறிது சிறிதாக கிருஸ்தவ சாயம் பூசப்பட்டு உருமாற்றம் அடைந்து கொண்டிருக்கிறது. என்று எழுதியிருந்தேன் அதை படித்து விட்டு உள்நாட்டிலிருந்தும்

வெளிநாட்டிலிருந்தும் நிறைய வாசகர்கள் இதை போன்ற விஷயங்கள் பலவற்றை வெளிக் கொண்டு வாருங்கள் என்று என்னிடம் வேண்டு கோள் வைத்தார்கள்.

அந்த பணியை வேறொரு நேரத்தில் செய்யலாம் என்றாலும் அது சம்மந்தமான சில கருத்துக்களை இந்த இடத்தில் தொட்டு காட்டினால் நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன். தமிழ் கடவுளான முருகபெருமானை இந்தியாவில் உள்ள பலதரப்பு மக்களும் பலகாலமாக இஷ்ட தெய்வமாக வழிபட்டு வருவதை நாம் அறிவோம் முருக வழிபாடு என்பது இந்து மதத்தின் பெருமைமிக்க தனிசொத்து என்று நாமும் நம்பி கொண்டு இருக்கிறோம் ஆனால் ஆய்வாளர்கள் என தங்களுக்கு தாங்களே பெயர் சூட்டி கொண்ட சில நச்சு அறிவாளிகள் முருக வழிபாடு இந்து மதத்திற்குரியது அல்ல அது முற்றிலுமாக கிருஸ்தவ மதத்திற்குரியது என்ற விஷம பிரச்சாரத்தை பரப்பி வருவதை நம்மில் பலர் அறிய மாட்டோம். அப்படியே அறிய வந்தால் கூட அட அதிசயமாக இருக்கிறதே என்று வியப்படைவோமே தவிர அதனுள் மறைந்திருக்கும் ஆபத்தை அறிய மாட்டோம்.

முருகன் பரமசிவனின் புத்திரன் என்று நமக்கு தெரியும் இதை கிருஸ்தவர்கள் தங்க ளுக்கு சாதகமாக பிதாவின் குமாரன் என்ற கருத்துக்குள் கொண்டு வருகிறார்கள். மேலும் பெருவாரியான முருகன் ஆலயங்கள் மலைமீது இருப்பதை ஏசுநாதர் கல்வாரி மலைமீது சிலுவையில் அறையபட்டதோடு ஒப்பிடுகி றார்கள். முருகனுக்கு காவடி எடுக்கின்ற பண் பாட்டை கூட ஏசுநாதர் சிலுவை சுமந்ததை நினைவூட்டுவதாக கருதுகிறார்கள்.

இந்துமத கடவுள்களை மட்டுமல்ல இந்து மதத்திற்கே தனிசொத்தாக திகழ்கின்ற பல நூல்களையும் கிருஸ்தவ மத கருத்துக்களை பரப்பும் நூல்களாக காட்டுவதில் முனைப்பு காட்டுகிறார்கள். அப்படி அவர்கள் காட்டுவதில் அதிக ஆர்வத்தோடு எடுத்துக்கொள்ளும் நூல் திருக்குறளாகும். திருக்குற ளில் சொல்லபடாத விஷயங்களே இல்லை என்பது உலகோர் அறிந்த ஒன்று அந்த பொது தன்மையை தங்களுக்கு சாதகமானதாக வைத்துகொண்டு ஒரு போலியான வரலாற்று ஆதாரம் ஒன்றை உரு வாக்கினார்கள்.

அதாவது கிபி.5253 காலகட்டங்களில் வாழ்ந்த புனித தோமா என்ற அப்போஸ்தலர் இந்தியாவில் தமிழ்நாட்டிற்கு வந்தாராம் அவரை இந்து மதத்தை சார்ந்த சிலர் வஞ்சகமான முறையில் சூழ்ச்சி செய்து கொலை செய்துவிட்டார்களாம் அந்த புனித தோமாவும் நமது திருவள்ளுவரும் இணைபிரியாத தோழர்களாக இருந்தார்களாம் தோமாவிடமிருந்து ஏசுநாதரின் கருத்துக்களை திருவள்ளுவர் கேட்டு அறிந்து மனதை பறி கொடுத்து அதை தமது திருக்குறள் என்ற ஈடு இணையற்ற நூலில் விளக்கமாக எடுத்து சொன்னாராம்.

எனவே திருக்குறள் என்பதே கிறிஸ்தவ மத நூல்தான் என்ற ஒரு புதிய கதையை உருவாக்கி அதற்கு இல்லாத ஆதாரங்களை இருப்பதாக சுட்டி காட்டி தெய்வநாயகம் என்ற கிருஸ்தவ அறிஞர் 1969 ஆம் வருடம் திருவள்ளுவர் கிருஸ்தவரா? என்ற நூலை வெளியிட்டார் அது அப்போது அறிஞர்கள் மத்தியில் சசலப்பை ஏற்படுத்தியது சில கிறிஸ்தவர்களே இந்த நூல் முழுமையான கற்பனை காரணம் கிருஸ்தவ மத கருத்துக்கள் எதுவும் திருக்குறளில் இல்லை திருக்குறளில் மறுபிறப்பு விதி போன்ற விஷயங்கள் பேசபடுகின்றன அவைகள் ஏசுநாத ரின் உபதேசங்களுக்கு விரோதமனவைகள் என்று மு.தெய்வநாயகத்தை கண்டித்தார்கள் கிறிஸ்தவர்களே கண்டித்த அந்த நூலுக்கு ஆதரவு தெரிவித்து முன்னுரை எழுதியது யார் தெரியுமா? யாரும் அதிசயம் அடைய வேண்டாம் வள்ளுவருக்கு குமரிமுனையில் வானளாவிய சிலை வைத்து வள்ளுவர் கோட்டம் எழுப்பி குறளோவியம் எழுதிய டாக்டர் மு.கருணாநிதி அவர்களே பிரித்தாளும்சூழ்ச்சியில் இந்தியர்களை பலியாக்கும் போலி யான வரலாற்று புனைவுகளுக்கு இதைவிட ஆதாரம் அதிகம் தேவை யில்லை. என்று நினைக்கிறேன்.


யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

அந்நிய சக்திகளின் ஏகபோக பதாதைகளை தூக்கி செல்லுகின்ற கருவிகளாக பல பத்திரிக்கைகளும் தொலைகாட்சிகளும் மத நிறுவனங் களும் அரசியல்வாதிகளும் சமூக ஆர்வலர்களும் அறிவுஜீவிகளும் செயல்படுகிறார்கள். இவர்கள் அனை வருமே கூட்டு சேர்ந்து அனைத்து சமூகங்களிலும் விதிவிலக்காக நிகழ்கின்ற கொடுமைகளை

e-magazine
aanmeegamalar.com

பிராதானபடுத்தி அவைகளுக்கு இந்துமதமே மூலகாரணம் என்ற பிரச்சாரத்திலும் ஈடுபடுகிறார்கள்.



இந்து மதத்தை அழிப்பதனால் அவர்களுக்கு எப்படி லாபம் கிடைக்கும்? என்று பலருக்கு தோன்றும் இந்து மதம் என்பது வெறும் வழிபாடுகள் நிறைந்த மதமல்ல அது ஒரு மக்கள் கூட்டத்தின் சமூக வாழ்வாகவும் இருக்கிறது. சமூகவாழ்வில் அடிப்படையாக இருப்பது பண்பாடு பண்பாட்டை தாங்கி பிடிப்பதில் பல முக்கிய தூண்களில் ஒன்றாக் இருப்பது பொருளாதாரம் எனவே பண்பாட்டை சிதைத்து விட்டால் சுயம் சார்ந்ததாக இருக்கின்ற பொருளாதார ஆதாரத்தையும் சிதைத்து சுயசார்பை தீர்த்து கட்டிவிடலாம். அதாவது இந்தியாவின் தனிபண்பாடான இந்து பண்பாட்டை ஒழிப்பதன் மூலம் அதை முழுமையாக அந்நியம் சார்ந்த நாடாக ஆக்குவதில் கஷ்டம் இருக்காது. இதற்க்கான முயற்சிகளே மதமாற்றம் கருத்து பிரச்சாரம் என்ற வகையில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

ஆரியர்களால் தெற்கு பகுதிக்கு கொண்டு வரப்பட்ட மதமே இந்துமதம் திராவிடர்களுக்கும் தமிழர்களுக்கும் தனியான மதமென்ற ஒன்று இருந்தது அதை ஆரியம் முற்றிலுமாக அழித்து விட்டது என்ற கருத்தில் ஓரளவு அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள் போலி புனைவை உண்மையாக ஆக்கிவிட்டார்கள் என்று சொன்னால் அது மிகையில்லை.

இங்கே எப்படி இந்து மதத்தின் ஆதார வேறை அசைத்து பார்ப்பதற்கு ஆரிய திராவிட மாய்மால கதைகள் உருவாக்க பட்டதோ அதே போலவே இப்போது குறிபார்த்து திட்டமிட்டு வனவாசிகளையும் அவர்களது பண்பாட்டையும் இந்து மதத்திலிருந்து முற்றிலுமாக பிரித்து எடுத்துவிட வேண்டும் என்ற திட்டம் மிக வேகமாக நடைபெற்று வருகிறது. இந்த திட்டத்தை அமெரிக்க ஏகபோக சக்திகளின் ஊது குழலாக இருக்கும் சில கிருஸ்தவ பாதிரியார்கள் மட்டுமல்ல நாத்திகம் பேசுகின்ற சீன அடிவருடிகளான மாவோ தீவிரவாதிகளும் செய்கிறார்கள்.

அதாவது வனவாசிகளின் வாழ்க்கை முறையானது நகரவாசிகளின் வாழ்க்கை முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்றாலும் கூட அது ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதது அல்ல ஆனால் அவைகள் தொடர்பே அற்றது இரு துருவங்களானது என்ற நம்பிக்கையை இருதரப்பு மக்களும் உறுதியாக நம்பும் வண்ணம் பல காரியங்கள் நடைபெற்று வருகின்றது.

இந்துமத நம்பிக்கைகளும் வழிபாட்டு முறைகளும் வனவாசிகளின் மத நம்பிக்கையில் இருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கிறது எனவே இந்திய வனவாசிகளின் மதம் என்பது வேறு நகரபுரத்து மதம் என்பது வேறு என்ற பிரித்தாளும் கருத்திலிருந்து அவர்களது பணி துவங்குகிறது என்று சொல்லலாம். மேலோட்டமாக பார்க்கின்ற போது காட்டு வாசிகளின் பூஜை முறைகளில் இருக்கின்ற நடன முறைகள் பலி கொடுத்தல் நம்பிக்கைகள் போன்றவைகள் அனைத்தும் சாதாரண இந்து மக்களின் நமிக்கையிலிருந்து மாறுபட்டதாக தெரிகிறதே எனவே அவர்கள் மதம் வேறு நமது மதம் வேறாக இருக்க கூடுமோ என்ற எண்ணம் கூட பலருக்கு வரலாம்

ஆனால் இந்த எண்ணம் அடிப்படை ஆதாரம் இல்லாதது. உண்மை நிலையை தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் வனவாசி மக்களின் முக்கிய பிரிவினராக இருக்கும் நரிகுறவ மக்களின் வழிபாட்டு முறையை ஆழ்ந்து சிந்தித்து பார்த்தால் அவைகளுக்கும் இந்துமத நம்பிக்கைகளுக்கும் வேற்றுமையை கிடையாது அனைத்தும் ஒற்றுமையானது என்ற தெளிவும் உண்மையும் நமக்கு ஏற்படும். எனவே அம்மக்களின் வழிபாட்டு முறையை சற்று ஆராய்ந்து பார்த்தால் தான் அந்நிய சக்திகளின் நிஜ முகமும் நமது மதத்தின் ஆழமான வேர் பதிவும் இன்னதென்று நமக்கு தெரியும். எனவே இதுவரை மத சம்பிரதாயங்களையும் தத்துவங்களையும் ஆராய்ந்து பார்த்த நாம் அதே தத்துவங்கள் எளிய மக்கள் மத்தியில் எப்படி இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள நரிக்குறவர்களின் வழிபாட்டு முறையை சற்று ஆழ்ந்து பார்ப்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434


e-magazine
aanmeegamalar.com

சோழர்கள் கருவூலம் நிறுவப்பட்ட ஊர்
சிவரகசிய நூலில் குறிப்பிடப்பட்ட ஊர்

# கும்பகோணம்


கோயில் நகரம் என்று அழைக்கப்படும் கும்ப கோணம் மிக முக்கிய நகரமாக கருதப்படுகிறது. இங்கு சைவ வைணவ கோயில்கள் அதிகம் உள்ளது. கும்பகோணத்தில் மகாமகம் மிகவும் பிரசித்தி பெற்ற ஒன்று. அதுமட்டுமில்லாமல் பல ரகசிய சிறப்புகளையும் தன்னுள் கொண்டுள்ளது அந்த சிறப்புகளைப் பற்றி நாம் பார்ப்போம்.

- கும்பகோணத்திற்கு குடந்தை என்ற பெயரும் உள்ளது. குடந்தை என்பது குடமூக்கு ஆகும். பின்நாளில் குடமூக்கு என்பது மறுவி குடந்தை என்று பெயர் பெற்றது.
- குடந்தை என்ற சொல்லுக்கு வளைவு என்ற பொருள் உள்ளது. முக்கிய நதிகளில் ஒன்றான காவிரி கும்பகோணம் வந்து வளைந்து செல்வ தாலும் குடமூக்கு என்ற பெயரும் உருவானதாக சொல்லப்படுகிறது.
- முக்கிய நதிகளான காவிரி கங்கை யமுனை சரஸ்வதி நதிகள் எல்லாம் கும்பகோணத்தில் உள்ளது என்று திருநாவுக்கரசர் பாடி பெருமை சேர்த்துள்ளார்.
- சோழ மன்னர்கள் கும்பகோணத்தையே பாது காப்பான நகரம் என்று தங்கள் கருவூலத்தை இங்கு அமைத்தனர்.
- சூத முனிவர் என்ற முனிவர் சிவரகசியம் என்ற நூலை உலகில் உள்ள மற்ற முனி வர்களுக்கும் எடுத்துரைத்தார். அந்த சிவரகசியம் என்ற நூலில் கும்பகோணம் பற்றி தெரிவிக்கப்பட்டியிருக்கும்.
- உலக உயிர்கள் கெட்ட வினையிலிருந்து நீங் கிட மோட்சம் பெற கும்பகோணம் தலத்திற்கு சக்தி உள்ளது. இதனை சிவபெருமானே அருளியுள்ளார்.
- கும்பகோணத்தில் உள்ள மாந்தாதாஎன்ற அரசன் கும்பலிங்கத்தை வைத்து பூசை செய்ததான் பலன் அவர் உலகின் பல் வேறு இடங்களையும் ஆட்சி செய்து சக்ராதி பதியாக விளங்கினார் என்று வரலாற்றில் கூறப்பட்டுள்ளது.



e-magazine
aanmeegamalar.com

- மாளவ நாட்டு வேந்தன் சத்திய கீர்த்தி பிராமணர் ஒருவரை கொன்ற பாவத்திற்காக இங்குள்ள காசிப தீர்த்தத்தில் நீராடி அந்த பாவத்தை போக்கினார்.
- சந்திரன் கும்பகோணம் சோமலிங்கத்துக்கு அர்ச்சனை செய்து நோயில் இருந்து விடுப் பட்டார்.
- குபேரன் கும்பகோண தலத்தை வணங்கிய பிறகு குபேரபுரிக்கு தலைவன் ஆனான்.
- திருமால் இத்தலத்தில் பூசை செய்து வைகுண்ட பேரு அடைந்தார்.
- தட்சன் யாகத்திற்கு சென்ற தேவர்கள் துன்பத்தினை சந்திக்க நேர்ந்தது. உடனே அவர்கள் கும்பகோணத்தில் உள்ள இறைவனை வழிப்பட்டதும் துன்பம் விலகிப்போனது.
- சூரியனின் ஒளியை அழிக்கும் படி மயனை அவன் மனைவி தூண்டினால். சூரியனும் மயனால் ஒளியை இழந்தான். பிறகு சூரியன் கும்பகோணத்தில் வந்து பெருமாளை வணங்கியாதால் மீண்டும் ஒளி பெற்றான்.
- வானவர்களும் பெறாத மகத்துவத்தைக் கும்பகோணத்தில் வழிபாடு செய்வர்கள் பெறலாம் என்ற ஐதீகம் உள்ளது.
- பவிஷ்யோத்ர என்ற வடமொழியில் உள்ள புராணத்தில் கும்பகோணத்தின் மகாமக மகிமை பற்றி சொல்லப்பட்டுள்ளது.
- யாழ்ப்பாணத்தை சேர்ந்த முருகேசன் பிள்ளை குடந்தை சிலேடை வெண்பா பாடியுள்ளர்.
- காசியைப் போலவே கும்பகோணத்திலும் எட்டுத்திசைகளில் எட்டு பைரவர்கள் காக்கின்றனர். இங்கு தான் ஞானம்பிகையுடனான பைரவேசர் கோவில் உள்ளது.
- சேதுவில் காசியில் செய்பெரும் பாவம் கோதிலாக் கும்பகோணத்தில் தீரும்' என்ற கும்பேசர் குறவஞ்சியில் காசியிலும் நீங்காத பாவம் கும்பகோணத்தில் தீரும் என்றுள்ளார்.
- கும்பகோணத்தில் பெருமையாக மகாமகம் குளம் 15 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில் லட்சகணக்கில் மக்கள் நீராடுகின்றனர்.
- சூரியனுக்கு நேர் எதிராக குருவும் சந்திரனும் இருக்கும் கிரக நிலையில் இந்த மூன்று கிரகங்களும் ஒன்று சேரும் இடமாக மகாமக குளம் உள்ளது. அதனால் புத்திர பாக்கியம் செல்லம் என அனைத்தும் தரும் இடமாக உள்ளது.
- மகாமகம் குளத்தில் நீராடிய அரசர்கள் பொன், பூமி, கன்னிகை, வஸ்திரம், பசு, குதிரை, காளைமாடு, அன்னம், தென்னை, குப்த தானம், சந்தனம், முத்து, நவரத்தினம், தேன், உப்பு, பழங்கள் எனப்படும் 16 தானங்களைச் செய்தார்கள். இந்தத் தானங்கள் எப்படிச் செய்வது என்ற விவரம் குளக்கரையைக்கு அருகே உள்ள தான மண்டபங்களில் குறிப் பிடப்பட்டுள்ளது.
- ராஜகேசரி என்ற என்ற சோழ அரசனு டைய கல்வெட்டில் மாகமகம் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. இவர் ராஜராஜ சோழனுக்கும் முற்பட்ட அரசன்.
- மாகமக வருடம் தொடங்கியதிலிருந்து அதாவது சிம்மகுரு காலத்தில் உள்ள நாட்களிலும் புனித நீராடலாம் அதிலும் குறிப்பாக மாசி மாதத்தில் நீராடுவது மிகவும் விசேஷம்.
- மாசி மாத மகம் நட்சத்திர நாள், சித்திரைப் பிறப்பு, கார்த்திகைச் சோமவார நாட்கள், அமாவாசை, பவுர்ணமி, சூரிய சந்திரகிரகண நாட்கள், உத்தராயனம், தட்சிணா யனம், விஷுபுண்ய காலம், கிருஷ்ணபட்ச அஷ்டமி, சிவராத்திரி, சுக்ரவாரம், கபில சஷ்டி ஆகிய நாட்களிலும் நீராடுவது மிகவும் நன்மை தரும்.
- கும்பகோணத்தில் நுழையும் முன் பஞ்சக்குரோசத் தலம் மற்றும் அஷ்டாதசத் தலத்தையும் தரிசப்பது கூடுதல் நம்மை வந்து சேரும்.





- மாசிமக நீராடலைப் பிதுர் மகா ஸ்நானம் என்று மாகபுரண அம்மானை நூல் கூறுகிறது. இதற்கேற்ப மாசி மகத்தன்று இறந்தவர்களுக்கு பித்ருகடன் தீர்க்க எள்ளும் நீரும் கொடுக்கும் சடங்கு நடைபெறுகிறது.
- மாசி மகத்தன்று விரதமிருந்து ஏழைகளுக்கு அன்னதானம் செய்தால் ஆண்சந்ததி உண்டா கும் என்ற நம்பிக்கையுள்ளது.
- மாசி மாதம் முழுவதுமே புண் ணிய நீராட ஏற்ற நாளக உள்ளது.
- பிரம்மா தான் மகாமக விழாவை முதன் முதலில் துவங்கி வைத்தார்.
- மாகமகக் கிணறு என்னும் சிம்மக் கிணறு திருக்கோஷ்யூரில் உள்ளது. இதுவும் சிறப்பு மிக்கதாகும். மாசிமகத்தன்று தெப்பத்திரு விழாவில் வேண்டுதல் நிறைவேறியவர்கள் தெப்பக்குளத்தில் தீபமேற்றி வழிப்படுது சிறப்பாகும்.
- கும்பகோணம் மகாமகக் குளம் கிழக்குமேற் காக நீள் சதுரமாகவும், வடகரையும் தென் கரையும் சிறிது உள்வளைந்தும், கிழக்கில் குறுகியும், மேற்கில் அகன்றும் அள்ளது. இதை மேலிருந்து பார்த்தால் குடம்போல காட்சியளிக்கும். இக்குளத்தில் நீராடினால் அமுத குளத்திலே நீரடிய நம்மை கிடைக்கும். பவுர்ணமி அன்று நீராடுவது மிகவும் சிறப்பு. அது ஏழேழு பிறவிக்கும் நன்மை தரும்.
- மகாமகக்குளத்தில் அமாவாசை, பவுர்ணமி மாதப்பிறப்பு, வெள்ளிக்கிழமை, கார்த்திகை நடசத்திரம், சிவராத்திரி, மாசிமகம் மற்றும் மாகமகம் ஆகிய தினத்தில் நீராடுவது மிகவும் சிறப்பு.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

- மகாமகம் அன்று கும்பகோணத்தில் உள்ள ஐந்து வைணவ தலங்களில் இருந்து பெரு மாள் காவிரி நதிக்கரையில் தீர்த்தவாரி செய் வார்கள்.
- மகாமகம் விழாவில் பங்கேற்க கும்பகோணம் செல்பவர்கள் கும்பேஸ்வரர், காசிவிசுவநாதர், அபிமுகேஸ்வரர், கவுதமேஸ்வரர், ஏகாம்பரேஸ் வரர், நாகேஸ்வரர், சோமேஸ்வரர், ஆதிகம் பட்ட விசுவநாதர், கோடீஸ்வரர், காளஹஸ்தீ ஸ்வரர், பாணபுரீஸ்வரர், அமிர்த கலசநாதர் ஆகிய 12 சைவ தலங்களுக்கும் சாரங்கபாணி, சக்கரபாணி, ராமசாமி, அனுமார், சாரநாராயணை பெருமாள், திவராக பெருமாள், ராஜ கோபாலசாமி ஆகிய 7 வைணவத் தலங்களுக்கும் ஆக மொத்தம்19 ஆலயங்களுக்கு சென்று வழிபட்டுவது மேலும் நம்மை தரும்.
- உப்பிலியப்பன் கோவில், பட்டீஸ் வரம், தாராசுரம், திருக்கருகாவூர், சுவாமி மலை, 108 சிவாலயம், இன்னம்பூர், திருவலஞ்சுழி ஆகிய ஊர்களில் உள்ள ஆலயங்களுக்கும் சென்று தரிசிப்பது வாழ்வில் மேலும் செல்வம் வந்து சேரும்.
- குரு சூரியனை சுற்றி வர 11.868ஆண்டுகள் ஆகின்றன அதால் சில தடவை 11 ஆண்டுகளிலேயே மாகமகம் வந்துவிடும் எனவே இதனை இளமாமாங்கம் என்றும் அழைக்கப்படுகிறது.



- கும்பகோணத்தில் கும்பேஸ்வரர் ஆலயத்தில் அமுத குடத்தை சிவபெருமான் வேடனாக வந்து அம்பு எய்தது சிலையாக உள்ளது.
- மகாமகத்தில் பங்கேற்கும் பக்தர்களுக்கு அருள் தரும் வகையில் கும்பேஸ்வரர் ஆலயத்தில் மங்களாம்பிகை தனது வலது கரத்தை கொண்டு காட்சியளிக்கிறாள்.
- மகாமக குளத்தில் நீராடினால் காசியில் 100 ஆண்டுகள் வாழ்ந்த புண்ணியமும் உலகை வலம் வந்த பலனும் கிடைக்கும் என்று புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- குடந்தை நாகேஸ்வரர் ஆலயத்துக்கு தரி சனம் செய்ய செல்லும் போது மறக்காமல் 4 யானைகள் பூட்டப்பட்ட தேர் வடிவில்

இருக்கும் நடராஜர் சன்னதியை காண தவறாதீர்கள்.

- நம்மை கவருந்து இழுக்கும் கங்கை கொண்ட விநாயகர் சிலை நாகேஸ்வரர் ஆலய கருவறை மின் மண்டபத்தில் உள்ளது.
- நாகேஸ்வரர் ஆலய பிரகாரத்தில் பகவத் சித்தரின் ஜீவசமாதி உள்ளது.
- எல்லா தலங்களையும் நகரங்களையும் பிரம்மன் படைத்தான் ஆனால் கும்பகோணத்தையோ சிவ பெருமனே உருவாக்கியதாக புராணங் களில் கூறப்பட்டுள்ளது.
- மகாகத்தில் நீராடும் நவநதிகள் எவை என்பது புராணங்களில் பல தகவல்கள் உள்ளன.
- மகாமகத் திருநாள் சிம்மகுருவாக இருக்கும் நிலையில்தான் கொண்டாடப்பட வேண்டும் என்பதே முக்கியமான விதியாகும்.
- மகாமக குளத்தில் உரிய விதிமுறையின்படி புனித நீராடா விட்டால் எதிர்வினைகள் வந்து சேரும் என்று புராணங்களில் எச்சரிக்கப்பட்டுள்ளது. முறைப்படி செய்யாத மகாமக ஸ்தானம் அவர்கள் செய்த புண்ணியத்தையும் தொலைத்துவிடும் திருக்குடந்தை புராணத்தில் கூறப்பட்டுள்ளது.
- மகாமக வருடத்தில் மங்கள காரியங்கள் செய்யக் கூடாது என்று ஒரு நம்பிக்கை உள்ளது. ஆனால் மகாமக தீர்த்த யாத்திரைக்கு இடையூறு இல்லாத வகையில் திருமணம் உள்ளிட்ட மங்கல காரியங்களை செய்யலாம் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.
- கும்பகோண பெரிய கடைவீதியில் தசாவதார கோவில் இருக்கிறது.
- பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவாரான திருமழிசை ஆழ்வார் சித்தியான இடம் திருமழிசை பிரான் ஆலயமாக குண்ப கோணத்தில் உள்ளது.
- குடந்தை கும்பேஸ்வரர் இருக்கும் திசையை நோக்கியும் வழிபட்டாலும் அவரது அருள் கிடைக்கும்.
- மகாமக விழாவில் பல ஆயிரக்கணக்கில் போலிஸ் குவிக்கப்பட்டு பக்தர்களுக்கு பாது காப்பு அளிக்கின்றனர்.
- அவரவர் பாவங்களை போக்கும் முதன்மை யான தீர்த்தமாக மகாமக குளம் உள்ளது. அதோடு பிறந்த நட்சத்திரத்தின் பலனும் கிடைக்கும் இடமாக உள்ளது.
- கும்பகோணம்என்ற சொல் வடமொழிச் சொல் குடம் என்றால் கும்பம் மூக்கு என்றால் கோணம் அதுதான் கும்பகோணமாகமறுவியுள்ளது.
- கும்பகோணத்திற்கு பாஸ்கரசேத்திரம், கல்யாணபுரம் தேவலோகப்பட்டிணம் சிவ விஷ்ணுபுரம் மந்திராதி தேவஸ்தானம் சாங்க ராஜன்பட்டினம் சேந்திரசாரம் ஒளிர்மிகு பட்ட ணம் உள்ளிட்ட பல பெயர்கள் இருந்தன. இவைகள் தற்போது எதுவம் பயன்பாட்டில் இல்லை.
- சிவன் விஷ்ணு பிரம்மா மும்மூர்த்திகளுக்கும் கும்பகோணத்தில் தான் கோவில்கள் உள் ளன.



- திருக்குடந்தை புராணம், மங்களாம்பிகைப் பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களில் கும்பேசு வரரையும், மங்களாம்பிகையையும் போற்றி பாடியுள்ளார்.
- மரசிற்ப கலைகளுக்கு பெயர் பெற்றது கும்ப கோணம் தான். சிற்பகலையிலும் சிறந்து விளங்கியதாற்கான ஆதாரங்கள் இங்கு உள்ளது.
- கும்பகோணத்தில் வைணவ மத்வ சைவ மடங்கள் நிறைய உள்ளன. இவற்றில் அஹோ பிலமடம், வியாசராய மடம், ராகவேந்திர மடம், திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆதீன மடங்கள் முக்கியமாவை.

– எம் அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி,
செல்: 9750333265

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிகமலர் மெயில் புக்




## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்









# ஷண்மதக் கடவுளான முருகனின் அற்புத சிறப்புகள்




❖ கந்தனுக்குரிய விரதங்கள்:
1. வார விரதம்,
2. நட்சத்திர விரதம்,
3. திதி விரதம்.

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

❖ முருகனின் மூலமந்திரம்.. **ஓம் சரவணபவாய நம** என்பதாகும்.

❖ மலைகளில் குடி கொண்டுள்ள குமரனுக்குச் சிலம்பன் என்றொரு பெயர் உள்ளது.

❖ முருகனுக்கு விசாகன் என்றும் ஒரு பெயர் உண்டு. விசாகன் என்றால் மயிலில் சஞ் சரிப்பவன் என்பது பொருளாகும்.

❖ முருகனின் கோழிக்கொடிக்கும் குக்குடம் என்றோர் பெயருண்டு. இந்தக் கோழியே வைகறைப் பொழுதில் ஓங்கார மந்திரத்தை ஒளி வடிவில் உணர்த்துவது ஆகும்.

❖ முருகப் பெருமானுக்கு உகந்த மலர்கள் முல்லை, சாமந்தி, ரோஜா, காந்தன் முதலியவை ஆகும்.

❖ முருகனை ஒரு முறையே வலம் வருதல் வேண்டும்.

❖ முருகனைப்போன்று கருப்பைப வாசம் செய் யாத வேறு தெய்வம் வீரபத்திரர்.

❖ பத்துமலை என்ற பெரியமலை மீது முருகன் உள்ளார். இந்த கோயில் (மலேசியா), கோலா லம்பூரில் இருந்து 18 கி.மீ. தூரத்தில் உள்ளது. தைப்பூசம் இங்கு விசேஷம்.

❖ முருகனுக்கு உருவமில்லாத கோவில் விருத்தா சலத்தில் உள்ளது. பெயர் கொளஞ்சியப்பர். அருவுருவ நிலைப் பிரார்த்தனை தலம் என்று இதனைக் கூறுவார்கள்.

❖ கந்தர் சஷ்டி கவசத்தை எழுதியவர் தேவராயன் ஆவார். முருக வழிபாடு என்பது ஷண்மதம் என்று சொல்லப்படுகின்றது.

❖ கோபுரத்து இளையனார் என்கிற முருகன் சந்நிதி திருவண்ணாமலையில் உள்ளது.

❖ முருகன் வீற்றிருக்கும் மிகநீண்ட மலை திருத் தணி பள்ளிப்பட்டு ரோட்டில் அமைந்துள்ள நெடியமலை ஆகும்.

# உலகின் மிக உயரமான சிவன் கோவில் துங்கநாத்

துங்கநாத்தில் அமைந்துள்ள உலகின் மிக உயரமான சிவன் கோவில் பாண்டவர்களால் கட்டப்பட்டது என்று நம்பப்படுகிறது. மகாபாரத போரில் கௌரவர்களை வதம் செய்த தோஷத் திற்காக சிவபெருமானிடம் மன்னிப்பு வேண்டி வந்த பாண்டவர்களை சந்திக்க விரும்பாத சிவ பெருமான் காளை வடிவில் உருமாறினார். அவரது உடலின் ஒவ்வொரு பகுதியுடன் தொடர்புடைய இடங்களே 'பஞ்ச கேதார்' ஆகின. துங்கநாத்தில் கைகள் காணப்பட்டன, கேதார்நாத்தில் அவரது கூம்பு; தலை ருத்ரநாத்திலும், தொப்புளும் வயிறும் மத்திய மஹேஸ்வரிலும், தலைமுடி கல்பேஸ் வரிலும் தோன்றின.



இமயமலை அடிவாரத்தில் அமைந்துள்ள முக்கிய கோவில்களில் உத்தரகாண்டின் துங்கநாத்தில் அமைந்துள்ள சிவன் கோவிலும் ஒன்றாகும். கிட்டத்தட்ட 5000 ஆண்டுகள் பழமையானது. 12,800 அடி உயரத்தில் ருத்ரபிரயாக் மாவட்டத்தில் உள்ள கர்வால் மலையில் அமைந்துள்ளது இந்த புனித ஸ்தலம். இதுதான் உலகிலேயே மிக உயரமான இடத்தில் அமைந்திருக்கும் சிவன் கோவிலாகும். இதற்கு மிக முக்கிய காரணம் இந்த கோயில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 3,680 மீட்டர் அதாவது 12,073 அடி உயரத்தில் அமைந்து உள்ளது. இமயமலைச் சாரலில் இருக்கும் பஞ்சபூதத் தலங்களில் துங்கநாத் ஆகாய தலமாக குறிப் பிடப்படுகிறது.



ஐந்து பஞ்ச கேதார கோயில் களில் ஒன்றான துங்க நாத் சிவன்



கோவிலுக்கு ஆண்டு தோறும் லட்சக் கணக்கான யாத்ரீகர்கள் வருகை தருகின்றனர்.

ஆதி சங்கராச்சாரியார் இந்தக் கோயிலை எழுப் பியதாகக் கருதப் படுகிறது. நாகரா கட்டிடக்கலை பாணியில் உருவாக்கப்பட்ட ஒரு அடிப்படை கட்டிடம் இந்த கோவில். கோவிலின் பிரதான தெய்வம் ஒரு லிங்கம். பார்வதி தேவி மற்றும் பிற இந்து தெய்வங்களுக்கான ஆலயத் தையும் காணலாம்.



டெல்லி தியாகராஜன்

நுழைவாயிலில், கோவிலுக்கான மலையேற்றப் பாதையின் முடிவில், வளைவின் மேல் துங்கநாத் என்ற பெயர் வரையப்பட்ட நுழைவாயிலை காண லாம்.

ஏப்ரல் முதல் நவம்பர் வரை பக்தர்கள் கோயி லுக்கு செல்லலாம். குளிர்கால மாதங்களில், கோவில் மூடப்பட்டு, சிவன் சிலை, அருகில் உள்ள மார்க்கண்டேஸ்வரர் கோவிலுக்கு மாற்றப் படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**எப்படி செல்வது:** 210 கிலோமீட்டர் தொலைவில் ரிஷி கேஷ் ரயில் நிலையம் உள் ளது. அங்கிருந்து ருத்ர பிரயாக் அல்லது உகிமத் வரை செல்ல வேண்டும். அதன் பிறகு சோப்தாவை சென்றடைய வேண்டும்.

உகிமத் சோப்தா 60 கி.மீ.

ருத்ரபிரயாக் சோப்தா 30 கி.மீ.

சோப்தா துங்கநாத் 3.5 கி.மீ (மலையேற்ற பாதை) தொலைவில் உள்ளது.

**பார்வையிட சிறந்த நேரம்:** ஏப்ரல், மே, ஜூன், செப்டம்பர், அக்டோபர், நவம்பர்

**கோவில் நேரம்:** காலை 6:00 மணி இரவு 7:00 மணி

**அருகில் உள்ள தலம்:** மார்க்கண்டேஸ்வரர் கோயில், மக்குமாத் 29 கி.மீ.

**கோவில் நேரம்:** காலை 5.00 மணி இரவு 8.00 மணி

## மிகவும் பழமை வாய்ந்த மயிலாடுதுறை (முளப்பாக்கம்) ஸ்ரீ விஸ்வநாதர் சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம்





மயிலாடுதுறை மாவட்டம் தர்மபுரம் ஆதினத்திற்கு அருகில் மூங்கில் தோட்டத் திலிருந்து ஒரு கிலோமீட்டர் தெற்கில் உள்ளது. இந்த ஆலையம் முளப்பாக்கம் என்ற கிராமத்தில் உள்ளது (முந்தைய பெயர் சொக்கநாதர் கோயில்) காலப்போக்கில் விஸ்வநாதர் ஆலயம் என்று மாறிவிட்டது. இது 500 வருட பழமையான கோயில் ஆகும். தற்போது ஆலய கும்பாபிஷேகம்,

நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம், சித்திரை மாதம் பத்தாம் தேதி (23 ஏப்ரல் 2025), புதன்கிழமை சதய நட்சத்திரம், தசமியும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில் காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் மிதுன லக்னத்தில் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. இங்கு நந்தி மண்டபம் மற்றும் ஆலய திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஆன்மீக சான்றோர்கள், முக்கிய பிரமுகர்கள், முளப்பாக்கம் கிராமவாசிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

மேலும் தொடர்புக்கு : திருமதி எல். சூர்யா கைபேசி எண் : 9498315205

–டெல்லி தியாகராஜன்
9868423215

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்**

**ஆன்மிகமலர்** மெயில்

**புத்தகத்தில்** (e-book)

**வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

# 186 க்கும் மேற்பட்ட

**இதழ்களை**




# aanmeegamalar.com

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**

# கஜாருடராக காட்சி தந்த
# கந்தவேலன்



குன்றுகள் என்றாலே குதூகலம்தான் குகனுக்கு. அந்த குன்றுகளில் குமரன் புரிந்த விளையாடல்களோ ஏராளம். அதிலும் கந்தன் வள்ளியை மணம் முடித்த தணிகாசலமும், அதையொட்டி வள்ளி கல்யாணத்திற்கு தொடர்புடைய திருத்தலங்களும் எண்ணற்றவை.

அதுபோல திருத்தணியை சுற்றிலும் ஆறுமுகனின் பாதம் பதிந்த மலைகளும் சற்று கூடுதல்தான். அப்படி மால்மருகனின் பாதம் பதிந்த அற்புத மறைத்தலம்தான் நெடியம்.

நெடிதுயர்ந்து காணப்படுவதால் இம்மலை நெடி யம் என்றானது. யானை படுத்திருப்பது போன்ற தோற்றத் தில் உள்ள இந்த மலை யானைமலை என்றும், கஜகிரி என்றும் போற்றப்படுகின்றது.

“நிலைபெறுந் திருத்தணியில் விளங்கு சித்திர நெடிய குன்றில் நிற்கும் முருகோனே”… என அருணகிரி நாதர் தனது திருத்தணிகை திருப்புகழில் இந்நெடிய மலையையும் இணைத்து பாடியுள்ளது சிறப்பு.

குறவர் கூட்டத்தாரிடம் இருந்து சமர் புரிந்து (போர் புரிந்து) வள்ளி யை கவர்ந்து வந்த









கந்தன், போர் புரிந்த சினம் அடங்காமல் இந்த நெடிய மலையின் மீது கால் ஊன்றுகின்றார். வேலவனது சினம் தாங்காத நெடியமலை பிளவுற்று சற்று கீழிறங்கியது. பின், தணிகை மலையில் கால்பதித்த குமரன், சினம் தணிந்து, வள்ளி கரம்பிடிக்கின்றார்.

குமரனின் பாதம் பதிந்த மகிமையினை அறிந்த இந்திரன்... இம்மலைக்கு வந்து, கந்தனை பிரதிஷ்டை செய்து, கல்ஹார புஷ்பத்தினால் பூஜிக்கின்றார். மகிழ்ந்த கார்த்திகேயன் காட்சி தந்தருள்கின்றார். முருகனின் திவ்விய திருக்காட்சிக் கண்ட தேவர்க்கோன் தனது ஐராவத யானையை கந்தனுக்கு பரிசளிக்கிறார்.

இதை ஏற்ற கந்தன் மீண்டும் யானை மீது அமர்ந்தபடி மேற்கு முகமாக திருக்காட்சி அளிக்கின்றார். இதனால் கந்தனுக்கு "கஜாரூடர்" என்கிற பெயர் உண்டானது. கந்தனது அற்புதத் திருக்கோலங்களில் இதுவும் ஒன்றாகும்.

யானையை பரிசு தந்த தேவேந்திரன் தனது ஐராவதமின்றி கலையிழந்த நிலையில் தேவ லோகம் செல்ல... ஐராவதம் இல்லாத தேவர் உலகமும் கலையிழந்து காணப்பட்டது. இதனால் ஏனைய தேவர்களின் ஏச்சுக்கும் ஆளாகின்றான் இந்திரன்.

இந்நிலையை தேவேந்திரன் தேவசேனாபதிக்கு எடுத்துரைக்க... வள்ளிமணாளன் மேற்கு திசையிலிருந்து கிழக்கு திசையான இந்திர திசைக்கு ஐராவதத்தை திருப்புகின்றார். கந்தனின் கருணையாலும், தெய்வீக ஒளியாலும் இந்திரனும், இந்திர உலகமும் ஒளி பெற்றதாக இத்தலத்தில் நடந்த சம்பவங்களை தணிகாசல புராணம் விரிவாக விவரிக்கின்றது.

திருத்தணி, இளையனார்வேலூர், செய்யூர் மற்றும் திருமாகறல் போன்ற தலங்களில் ஐராவத கஜாரூட கோலத்தில் தரிசிக்கலாம். பல திருத்தலங்களில் முருகனுக்கு யானை வாகனம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

சுமார் 600 படிகள் கொண்ட மலைமீது தனிக் கோவில் கொண்டுள்ளார் கந்தன். கார்வேட்டு மகாராஜாவால் கட்டப்பெற்ற ஆலயம் அழகுற அமைந்துள்ளது. இந்திரன் இத்தல முருகனை செங்கலுவ (தெலுங்கில்) என்னும் நீலோற்பல மலரால் பூஜித்ததால் "செங்கல்வராயர்" என்கிற திருப்பெயருடன் திகழ்கின்றார். இங்கு மூல ஸ்தானத்தில் வீற்றிருக்கும் முருகன் ஒரு திருமுகமும், நான்கு திருக்கரங்களும் கொண்டுள்ளார். இடது கரத்தை இடுப்பில் மடித்தபடி கடியஸ்தராக திருக்காட்சி தருகின்றார். வள்ளி

e-magazine
aanmeegamalar.com







மற்றும் தெய்வானை உடன் உள்ளனர்.

வள்ளி தெய்வானையுடனான ஷண்முகர், ஸ்ரீ பாலசுப்பிரமணியர், கணபதி, காலபைரவர், திருபுரசுந்தரி உடனுறை திருக்குமாரேஸ்வரர், ஸுமித்ரேஸ்வரர், ஸ்ரீ சண்டிகேஸ்வரர், ஸ்ரீ சூரியன், திருமால், மகாலட்சுமி, கருடாழ்வார் ஆகிய தெய்வங்களும் ஆலயத்தின் பரிவாரங்களாக அமைந் துள்ளன.

கிருத்திகையில் சிறப்பு அபிஷேக, அலங்காரங் கள் செய்விக்கப்படுகின்றன. ஆடிக் கிருத்திகை யில் காவடி எடுத்துக் கொண்டு பக்தர்கள் அதிக அளவில் வருகின் றனர்.

பங்குனி உத்திர பிரம்மோற் சவம் கோலாகலமாகக் கொண்டாடப் படுகின்றன. ஆங்கில வருடப் பிறப்பன்று கந்தன் சந்தனக் காப்பில் கண்கொள்ளாத காட்சி அளிப்பார்.

இங்கு ஆலயத்தில் விஜய நகர மன்னர்களின் கல்வெட்டுகள் பெருமளவில் காணப்படுகின்றன. இந்திரன் கண்ட ஜுனை நீலோற்பல தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. இதுவே இத்தலத்தின் தீர்த்தமாகத் திகழ்கிறது. மேலும் இரண்டு சுனைகளும் இங்குள்ளன.



மோ.கணேஷ்

தினமும் காலை 9 மணி முதல் 11 மணி வரை மட்டுமே ஆலயம் திறந்திருக்கும். கிருத்திகையில் சற்று கூடுதலாக திறந்திருக்கும். தினமும் ஒரு கால பூஜை நடைபெறும் இவ்வாலயம் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

திருத்தணியை தரிசிக்கும் முன்னர் இந்த நெடியமலையில் உள்ள ஸ்ரீ செங்கல்வராயரை தரி சிப்பது சிறப்பிலும் சிறப்பாகும்.

கல்வித்துறை சார்ந்தவர்களும், வாகனத் துறையில் இருப்பவர்களும் வழிபட வேண்டிய சிறந்த தலமாக இந்த நெடியமலை திகழ்கின்றது.

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப் பட்டிலிருந்து 7 கிலோமீட்டர் தொலைவில் நகரி செல்லும் பேருந்து மார்க்கத்தில் கரீம்பேட்டிற்கு அடுத்ததாக அமைந்துள்ளது நெடி யம்.

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.



e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 180 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# நொய்டா கோவிலில் ஸ்ரீ ராம நவமி



e-magazine
aanmeegamalar.com

'ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு ராம சடாக்ஷர ஹோமம்', ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவில், பிரிவு 62, நொய்டாவில் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து ஸ்ரீ ராமருக்கு சிறப்பு அபிஷேகம் நடந்தது. இந்த சிறப்பு சந்தர்ப்பத்தில், ஸ்ரீ ராமர் பரிவாரத்திர்க்கு வெள்ளி கவசத்தால் அலங்கரிக்கப்பட்டது. பண்டிட் ஸ்ரீ கிருஷ்ணா பந்த் மற்றும் குழு, பஜனைகளை வழங்கினார். நிகழ்வு மகா தீபாராதனையுடன் முடிவடைந்தது, மேலும் 1500 க்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் விநியோகிக்கப்பட்டது. அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் கலந்து கொண்டனர்.



எஸ்.வெங்கடேசன்

ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு மாலையில், ஸ்ரீ ராமர் லக்ஷர்ச்சனை ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோயில் வளாகத்தில் 62, நொய்டாவில் நடைபெற்றது. அறுபதுக்கும் மேலாக பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஆஸ்தானா பண்டிதர்கள் ஸ்ரீ ஸ்ரீராம் மற்றும் ஸ்ரீ சங்கர் ஆகியோர்




மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் அனைத்து பூஜைகளும் கோவில் வாத்தியார்கள்: ஸ்ரீ மணிகண்டன் சர்மா மற்றும் ஸ்ரீ மோஹித் மிஸ்ரா உதவியுடன் நடந்தன.

வெள்ளி கவசத்திற்கு நன்கொடை அளித்த பல்வேறு நன்கொடையாளர்களுக்கு கோவில் மேலாண்மை நன்றி தெரிவித்தது.

மேலும், தன்னார்வலர்கள், ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாமா மண்டலி, குழு உறுப்பினர்கள்: ரவி சர்மா, பாலாஜி, ராமசேஷன், ராஜு ஐயர், ராஜேந் திரன், வெங்கட்ராமன் மற்றும் பலர் அவர்களின் அர்ப் பணிப்பு சேவை இல்லாமல், இந்த நிகழ்வு ஒரு பெரிய முறையில் நடந்திருக்க முடியாது என தெரிவித்துக் கொண்டது.

## நொய்டா முருகன் கோவிலில் சஷ்டி, கிருத்திகை

‘நொய்டா முருகன் கோவில்’ என்று எல் லோராலும் அறியப்படும், ஸ்ரீ விநாயகா ஸ்ரீ கார்த்திகேய கோவிலில் கிருத்திகை மற்றும் சஷ்டியை முன்னிட்டு ஸ்ரீ கார்த்திகேயனுக்கு சிறப்பு அபிஷேகம் நடந்தன.

கார்த்திகை நட்சத்திரம் மற்றும் சஷ்டி ஒரே நாளில் வருவது மிகவும் சிறப்பானதாகும். நொய்டாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து மட்டுமின்றி, டெல்லி, இந்திராபுரம், காஜியாபாத், மற்றும் குருகிராம் ஆகிய அண்டைப் பகுதிகளிலிருந்தும் வந்த



பக்தர்கள், ஸ்ரீ கார்த்திகேயரைப் போற்றிப் பல்வேறு ஸ்லோகங்களைச் சொல்லி, ‘முருகனுக்கு ஹரோ ஹரா’ என்று கோஷமிட்டதை காண முடிந்தது.

‘சுக்குக்கு மிஞ்சிய மருந்து இல்லை, சுப்பிர மணியனுக்கு மிஞ்சிய தெய்வமும், இல்லை’, என்கிற பழமொழி, நாம் எல்லோரும் அறிவோம்‘. முருகனின் மறுபெயர் அழகு’ காண, நொய்டா செக்டர் 62 முருகன் கோவிலுக்கு பக்தர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது . இங்குள்ள முருகனை வணங்கினால் ‘வெற்றி’ நிச்சயம். கோபுரத்தைக் காண வருவோர்க்கு ‘கோடி புண்ணியம்‘ என்று கோவில் நிர்வாகம் தெரிவித்துக்கொள்கிறது.

– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா
தொடர்பு எண்: 9811161370

# கோபத்தையும், பொறாமையும் இறைவனிடம் கொடுத்து விடு

**சீடன்:** பக்தி எப்பொழுது வருகிறது?

**ஞானி:** இறைவனைக் காண வேண்டும் என்ற ஏக்கம் வரும் போது.

**சீடன்:** மஹான்களை தரிசிப்பது எதற்காக?

**ஞானி:** அதிர்ப்தியை தீர்த்து திருப்தி கொள்ள.

**சீடன்:** இறைவனிடம் எதிர் பார்ப்பது தவறா?

**ஞானி:** எதிர் பார்த்தால் பாடுபட வேண்டியிருக்கும்.

**சீடன்:** நமது வீரம் எப்படி இருக்க வேண்டும்?

**ஞானி:** நம் குற்றங்களை களைவதிலே.

**சீடன்:** முன்னேறுவது எப்படி?

**ஞானி:** அவரவர்கள் அளவில் முன்னுக்கு வருவது கடினம். கடவுளால் தான் அதை செய்ய முடியும். இது குருநாதர்களின் வார்த்தை.

**சீடன்:** குருநாதர்கள் வார்த்தைக்கு அவ்வளவு சக்தியா?

**ஞானி:** ஆமாம். ஞானிகளிடமிருந்து அருளை வாங்கிக் கொள்ளாமல் கடையில் கள்ளை வாங்கிக் குடித்தால் மயக்கம் தான் வரும். ஆனால் ஞானிகளிடமிருந்து அருளுடன் கள்ளைக் குடித்தாலும் மயக்கதின் நடுவில் கடவுள் தெரிவான், சாமி மயக்கம் தெரியும்.

**சீடன்:** கேட்பதற்கு சுகமாக இருக்கிறது?

**ஞானி:** இன்னொருவரின் அனுபவத்தை வைத்து தெரிந்து கொள்வது துன்பம் தான், சாதனை அல்ல. தானாக உணர்ந்தவனே சாதகன்.

**சீடன்:** இந்த துன்பம் எப்படி வருகிறது?

**ஞானி:** துன்பம் வெளியில் இருக்கும். துன்பத்தைப் பற்றிய உணர்வு உள்ளத்தில் இருக்கும். அது தான் அவஸ்தை என்று பெயர்.

**சீடன்:** எதற்கும் எப்படி பதில் சொல்கிறீர்கள்?

**ஞானி:** எதைக் கேட்டாலும் எப்படி பதில் சொல்லத் தெரிய வேண்டும் என்று சொல்லித் தருபவன் கடவுள்.

**சீடன்:** பக்தி, சமயம் என்ன வித்தியாசம் சுவாமி?

**ஞானி:** சாதாரணமாகத் தோன்றுவது பக்தி. அசாதாரணமாக தோன்றுவது சமயம்.

**சீடன்:** பக்தி சாதாரணமாக என்பது எப்படி?

**ஞானி:** பகவானை உங்கள் சொத்தாக எண்ணினால்.

**சீடன்:** இது ஏன் எல்லோருக்கும் புரிவதில்லை?

**ஞானி:** மனம் மாறியவர்களுக்கு எல்லாமே புரியும். மனம் மாறாதவர்களுக்கு தங்களை மட்டுமே புரியும்.

**சீடன்:** இது எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டுமே?

**ஞானி:** தெரியும். ஒரு உன்னத கருத்து சமுதாயத்திற்கு மொத்தமாகத் தெரியும்போது அது அறிவாகத் தான் இருக்கும். அதுவே ஒரு தனிமனிதனுக்கு புரிந்தால் அந்த மனிதன் மாறி உயருகிறான்.

**சீடன்:** கௌரவம் என்றால் என்ன சுவாமி?

**ஞானி:** பார்வை பொது என்று தெரிந்தால் தான் கௌரவம்.

**சீடன்:** பாபம் என்றால் என்ன சுவாமி?

**ஞானி:** தெரிந்தோ, தெரியாமலோ எதை எதையோ பெரிது என்று எண்ணுவதே பாபம்.



**சீடன்:** உலக ஆசை அகல மறுக்கிறதே?

**ஞானி:** நாக்குச் சபலம் நீங்கினால் வாக்கு பலிதம் ஏற்படும்.

**சீடன்:** இறைவனை அடைய பூஜை வழிபாடுகள் அவசியமா?

**ஞானி:** ஒரு மொழியைத் தெரிந்து கொள்ள அதன் அடிப்படை எழுத்துக் களைப் புரிந்து கொள்ள வேண்டாமா?

**சீடன்:** கடவுளுக்கும், சிந்தனைக்கும் என்ன தொடர்பு?



ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

## ஆசிரியர் குழுவில் இணையலாம்

**ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

ஞானி: சிந்தனையில் வைத்துக் கொண்டிருந்தால் கடவுளின் விளக்கம் தெரியாது.

சீடன்: பின் எப்படி இருந்தால் விளங்கும்?

ஞானி: ஞானமாய் சொல்வது ஞானமாகவும், யோகமாய் சொல்வது யோகமாகவும் தெரிந்தால் விளங்கும். இப்பொழுது இவை யெல்லாம் சிந்தனையாக அறிவாகத் தான் தெரிகிறது.

சீடன்: உபதேசம் என்றால்?

ஞானி: உங்களிடம் ஒன்றும் இல்லை என்று காட்டிக் கொடுப்பது..

சீடன்: அறியாமை என்றால்?

ஞானி: உங்களிடம் எல்லாம் இருக்கிறது என்று சொல்லி குரு புரிய வைப்பது.

சீடன்: கிரியை என்றால் எப்படி இருத்தல் வேண்டும்?

ஞானி: சுலபமாக உள்ளது எல்லாம் கிரியை. பாவத்திற்கு தக்கபடி தான் கிரியைகள் வரும்.

சீடன்: குருநாதர்களின் கருணை எப்படிப்பட்டது?

ஞானி: உனக்கு முன் அனுபவம் உண்டா என்று கேட்க மாட்டான் குருநாதன் சொல்லித் தருவான்.

சீடன்: கோபமும், பொறாமையும் போக மறுக்கிறதே?

ஞானி: அதை இறைவனிடம் கொடுத்து விடு, போய்விடும்.

சீடன்: கடவுள் அதை வைத்து என்ன செய்வான்?

ஞானி: கோபம் மனிதனிடம் இருந்தால் அசிங்கம். அதுவே கடவுளிடம் இருந்தால் நரசிங்கம் என்ற அழகிய சிங்கம்.

சீடன்: தெய்வங்கள் புதிய விளக்கம் சொல்லுங்களேன்?

ஞானி: மனிதனின் மிக உயர்ந்த எதிரொலி கள்.

சீடன்: நரசிம்மம் கோபமுள்ள கடவுளா?

ஞானி: உன் மாதிரி கோபமுள்ளவனல்ல. நரசிம்மத்தை உபாசித்து ஞானம் பெற்றவர்கள் உண்டு. கோபமுள்ள மனிதனை உபாசித்தால் கோபம் தான் வரும்.

சீடன்: ஜெபத்தால் நரசிம்மரை அடைய முடியுமா?

ஞானி: கடவுளுக்கு ரூபத்தைக் கொடுத்து விட்டு ஜபத்தை நம்பாமல் இருந்தால் அதன் பெயர் பக்தியா?

சீடன்: எவ்வளவு பக்தி இருந்தாலும் மரணம் பொது தானே?

ஞானி: செத்த பின்னும் முன்னுக்கு வருவது ஞானிகளும், மகான் களுமே. அதுவே ஆராதனை.

சீடன்: பக்தி வாழ்க்கைக்கு உதவுமா?

ஞானி: பக்தி என்று முதல் தோன்றுகின்றதோ, அன்றே வாழ்க்கை சுவையாக இருக்கத் தோன்றுகிறது.

சீடன்: பக்தியைத் தத்துவமாக்கினால்?

ஞானி: தத்துவங்கள் எவ்வளவோ உண்மைகளைச் சொல்லலாம். ஆனால் என்று அவைகள் அனுபவங்கள் ஆகிறதோ அன்றே அவைகள் அர்த்தமுள்ளவைகளாகின்றன.

சீடன்: மகான்களை சந்தித்தால் இது சாத்தியமா?

ஞானி: உண்மையைப் புரிந்து கொண்டால் தான் சந்திப்பின் பலன் உண்டு.

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# ஸ்ரீ நிமிஷாம்பிகா தேவி ஆலயம் ஐதராபாத்






ஜகன்மாதாவான ஸ்ரீ பார்வதி தேவியின் அம்சமாக ஸ்ரீ நிமிஷாம்பிகா தேவி வணங்க படுகிறார். மனித பிறவி எடுத்த மக்கள் தினம் தினம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும், கஷ்டங் களும், கவலைகளும் கணக்கில் அடங்காதவை. நமது அனைத்து கவலை, கஷ்டம் எல்லாம் நிமிஷத்தில் தீரவும், மகிழ்ச்சி நிலைக்கவும், நாம் வழிபட வேண்டிய தெய்வம் தான் லோகமாதாவான ஸ்ரீ நிமிஷாம்பிகா தேவி.

பக்தர்களின் குறை தீர்க்க, தேவி திருஉள்ளம் கொண்டு பாக்கிய நகரமாம் ஐதராபாத்தில் கோவில் கொண்ட இடம் போட் உப்பல், மேற்கு அனுமன் நகர், பென்டா ரெட்டி காலனியில் அமைந்துள்ளது. இத்திருக்கோவில் 2006 ம் ஆண்டு கட்டப்பட்டது. தேவி சிம்ம வாகனத்தின் மீது அமர்ந்து நான்கு திருக்கரங்களில், மேல் திருக்கரத்தில் திரிசூலம், டமருகம் தாங்கி, கீழ் திருக்கரங்கள் அபய, வரத அஸ்தமாக அருள்பாலிக்கிறாள். கருணையே வடிவான அன்னையின் அழகிலும், அலங்காரத்திலும் மனம் அமைதி அடைகிறது. ஸ்ரீ நிமிஷாம்பிகா தேவியை தேடி வரும் பக்தர்கள், தம் மனக்குறைகளை கூறி, துவஜஸ்தம்பத்தில் வணங்கி, கோவில் பிராகாரத்தை 16 முறை பிரதட்சணம் வர வேண்டும். பக்தர்களின் அனைத்து வேண்டுதல்களும், பிரார்த்தனைகளும் 21 நிமிஷத்திலும், 21 நாட்களில் நல்ல தீர்வும் கிடைப்பதால், பக்தர்கள் மறுமுறை இத்திருக்கோவில் வந்து, 108 முறை பிரதட்சணம் செய்து, அர்ச்சனை செய்து, நன்றி கூறி தேவியை வணங்கி செல்கிறார்கள்.

e-magazine
aanmeegamalar.com





அன்னை அருள் கடல் என்பதற்கு நாளுக்கு நாள் பெருகி வரும் பக்தர்களின் கூட்டமே சாட்சி.

ஸ்ரீ நிமிஷாம்பிகா தேவி சோம ஷத்திரிய வம்சத்தினரின் குலதெய்வம். இக்குலத்தில் தோன்றிய முக்த முனி என்பவர் பல யாகங்கள் செய்து, ஆதி தம்பதிகளான ஸ்ரீசிவ பார்வதி அருள் பெற்றவர்.

அவர் வசித்த பகுதியை ஆண்ட அரசன், முக்த முனியின் தலைமையில், பல வேள்விகளும், யாகங்களும் செய்து, எதிரிகளை வென்று, நல்லாட்சி நடத்த விரும்ப, முனிவரும் சம்மதிக்க, யாகம் நடந்தது. சில அசுரசக்திகள்


யாகத்திற்கு இடையூறு செய்தன. அசுர சக்திகளை அழித்து, மக்கள் நலன் கருதி, நடத்தபடும் யாகத்தை காத்து அருள வேண்டும் என முக்த முனி தேவியிடம் வேண்ட, அடுத்த நிமிடமே ஸ்ரீ நிமிஷாம்பிகா தேவி யாகத்தீ யிலிருந்து ஆர்ப்பரித்து எழுந்து, கொடியவர்களை அழித்து, யாகத்தை காத்து, முனிவருக்கு அருளி, அரசனுக்கு போரில் வெற்றியும் அளித்தாள்.

ஸ்ரீகிருஷ்ணராஜ உடையாரால் முதன் முதலில் நிர்மாணிக்கப்பட்ட ஆலயம் மைசூர் ஸ்ரீரங்கபட்டணத்திலிருந்து 2 கி.மீ ல் உள்ளது. பக்தரகளின் முயற்சியால், அன்னை விரும்பி, கோவில் கொண்ட இடங்கள் ஏராளம். அப்படி அன்னையின் திருஉள்ளப்படி அமைந்தது இந்த ஆலயம்.

இத்திருக்கோவிலில் ஸ்ரீ நிமிஷாம்பிகா தேவிக்கு செவ்வாய், வெள்ளி மற்றும் பௌர்ணமி நாட்களில் விசேஷ அபிஷேகம், அலங்காரம் நடைபெறும். மகா மேறு, ஸ்ரீ சக்கரத்திற்கு தினம் குங்கும அர்ச்சனை நடக்கிறது. சிரவண மாதம் (ஆவணி மாதம்) வரலட்சுமி விரதம் வரும் நான்கு வெள்ளி கிழமைகளும் (சிராவண சுக்ர வாரம்) தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் ஏராளம்.

முதல் வெள்ளி அன்று 1116 சேலைகளால் அலங்காரம், இரண்டாம் வெள்ளி தங்க கவசம், தங்க புடவையும், மூன்றாம் வெள்ளி 46 வகை இனிப்புக்களாலும், நான்காவது வெள்ளி ஒரு லட்சம் வளையல்களாலும் மிக நேர்த்தியான அலங்காரத்தில் தேவியை தரிசிக்க கண்கோடி வேண்டும்.

இத்திருக்கோவிலில் தனி சன்னதிகளில் ஸ்ரீகணபதி, ஸ்ரீசிவன், ஸ்ரீஇராம, சீதா லட்சுமணர், ஸ்ரீசாய் பாபா, ஸ்ரீ தத்தாதேரயர், ஸ்ரீ ஆஞ்சநேயர் அருள்பாலிக்கிறார்கள். நவகிரக சன்னதியும், நாக பிரதிஷ்டையும் உள்ளது. இங்கு திங்கள் கிழமை சிவனுக்கு அபிஷேகம், வில்வ அர்ச்சனை, செவ்வாய் அன்று ஆஞ்சநேயருக்கு அபிஷேகம், வெற்றிலை மாலை, வெண்ணை காப்பு, புதன்




அன்று கணபதிக்கு அபிஷேகம், வியாழன் அன்று பாபாவிற்கு விசேஷ ஆர்த்தி வெள்ளி அன்று தேவிக்கு அபிஷேக அலங்காரம், சனி அன்று நவக்கிரக தைல காப்பு, சங்கட ஹர சதுர்த்தி ஹோமம், பௌர்ணமி அன்று சத்ய நாராயண விரதம் என தினமும் விழாக்கோலம் தான். நவராத்திரி மற்றும் அனைத்து பண்டிகைகளும் மிக விமர்சையாக கொண் டாடபடுகிறது.

இத்திருக்கோவிலில் தரிசன நேரம் காலை 6 மணி முதல் மதியம் 12.30 மணி வரை. மாலை 5 மணி முதல் 8.30 மணி வரை.

16 முறை சங்கல்ப பிரதட்சணமும், பின் 108 முறை நேர்த்தி கடன் பிரதட்சணமும் செய்ய பக்தர்கள் அதிகமான எண்ணிக்கையில் வருவ தால், பிரதட்சண நேரம் காலை 6 மணி முதல் 9 மணி வரை. மதியம் 2 மணி முதல் 5 மணி வரை தான் அனுமதி உண்டு.

ஸ்ரீ நிமிஷாம்பிகா தேவியை தரிசித்து, வாழ் வில் நிம்மதியும், சந்தோஷமும் பெறும் பாக்கியம் அனைவருக்கும் கிடைக்கட்டும்!!!

–சுபத்திரா ரங்கநாதன்
ஐதராபாத்.



ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
.காம்
FREE
180 e-books
1000–க்கணக்கான
ஆன்மிக செய்திகள்
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை
பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...
eBook
FREEDOWNLOAD
யாகத்தால் மழை வருமா?
aanmeegamalar.com
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

சார்பில்

# 2025 சித்திரை மாத சிறப்பிதழ் தயாராகிறது



மதுரையைச் சுற்றியுள்ள கோவில்கள்

மதுரை மீனாட்சியின் வெளிவராத அற்புதங்கள்

ஆறுபடை வீட்டில் திருப்பரங்குன்றம்,
பழமுதிர்சேலை ஆகிய
இரண்டு படைவீடு கொண்ட மதுரை

எண்ணற்ற மதுரை கோவில்களின் சிறப்புகள்

## விரைவில்...

உங்கள் கைகளில்



உங்கள் நிறுவன விளம்பரங்கள்
குறைந்த செலவில்
தரமாக வெளிவர எங்களை
தொடர்பு கொள்ளவும்...

ஆன்மிக அன்பர்கள் இதழ் குறித்த
தகவலை பெற தொடர்பு கொள்ளவும்

மேலும் தகவல்களுக்கு:

**Ph:9994323622** W.No:9444228203

# ஆன்மீக வழியில் அமைதி



e-magazine
aanmeegamalar.com

உலகில் பக்திக்கு நிகராக எதுவும் கூற முடியாது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி மார்க்கத்தில் சென்றுதான் கடவுளைப் பற்றி நன்கு அறிந்தும் போற்றியும் இருக்கிறார்கள். நாயன்மார்கள் பக்தி மார்க்கத்தை தேவாரம், திருவாசகம், திருவெம்பாவை போன்ற பாடல்கள் மூலம் மக்களிடம் பக்திநெறியை பரப்பி இருக்கிறார்கள்.

திருவாசகம் என்னும் நூல் பன்னிரு சைவ சமயத் திருமுறைகளில் எட்டாம் திருமுறையாகும். மாணிக்கவாசகர் பாடிய இந்த நூலுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. ”திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்தும் உருகார்'' என்ற பழமொழி இதன் சிறப்பை நன்கு வெளிப்படுத்துகிறது.

திருவாசகப் பாடல்கள் அனைத்தும் மனதை உருக்கும் தன்மையுடன் கூடியவை அதேபோன்று ஆழ்வார்கள் நாலாயிரத் திவ்யப்பிரபந்தம், ஆண்டாள் பாசுரம் போன்றவைகள் மூலம் பக்தி நெறியைப் பரப்பி இருக்கிறார்கள்.

பக்தி மார்க்கத்தில் செல்வதற்கு ஆன்மீக வழியில் சில வழிமுறைகள் இருக்கின்றன. அதனைத்தான் ஆன்மிகம் பக்தியோகம் கர்மயோகம், ஞானயோகம் என்றும் கூறுகிறது.

85

பொதுவாக பக்திக்கு கர்ம யோகமும் தேவை ஞானயோகமும் தேவை. பக்தியைப் பற்றி கூறும்போது அதாவது பக்தியோகத்தின்படி இறைவன் நாமத்தைக் கூறிக்கொண்டே இரு என்றால் மனிதன் தன்னோட பணிகளை மற்றும் கடமைகளை எப்போது எப்படி செய்ய முடியும். அவனவன் பணிகளை கடமைகளை யார் பார்ப்பது என்று சந்தேகம் நமக்கு இயல்பாக தோன்றும்.

நமது கர்மாக்களை அதாவது நமக்குரிய பணிகளை அல்லது கடமைகளை தவறாமல் செய்ய வேண்டும். கர்மா என்பது காலை முதல் இரவு வரை செய்யக்கூடிய கர்மங்களை கர்ம யோகம் என்று ஆன்மிகம் கூறுகிறது.

நமக்குரிய கடமைகளை அல்லது பணிகளை செய்யாமல் பக்தி மட்டும் செலுத்தினால் அது பக்தி யோகம் ஆகாது. நாம் பக்தியோடு உலகில் நமக்கு உரிய பணிகளையும் கடமைகளையும் செய்ய வேண்டும் என்று கர்மயோகம் வலியுறுத்திக் கூறுகிறது.

பக்தியோடு செய்யக்கூடிய செயல்கள்தான் கர்மயோகம் ஆகும். ஒருவன் மற்றவர்கள்செய்யக் கூடிய செயல்களை மட்டும் செய்து கொண்டிருந்தால் அதனை பக்தி யோகம் என்று கூற முடியாது.

பக்தியுடன் கூடிய நமது பணிகளை அதாவது கடமைகளைத்தான் கர்ம யோகம் என்று பகவத்கீதை கூறுகிறது. ஒருவன் செய்யக்கூடிய செயல்களை வைத்தும் நமது எண்ணங்கள் மூலம் வெளிப்படும் தன்மையை வைத்தும் உயர்ந்த செயல்கள் தாழ்ந்த செயல்கள் என்று அறிந்து கூற முடியும்.

எடுத்துக்காட்டாக ஒரு தீக்குச்சியை வைத்து குத்துவிளக்கு ஏற்ற முடியும். அதே தீக்குச்சியை வைத்து கூரையையும் கொளுத்துவதற்கு முடியும். தீக்குச்சியை வைத்து குத்துவிளக்கு ஏற்றும் செயல் என்பது நல்ல செயல் ஆகும். கூரையை கொளுத்துவது என்பது தீய செயல் ஆகும். நமது எண்ணங்களின் வெளிப்பாடுகளை வைத்துதான் செயலின் தன்மைகள் வெளிப்படுகிறது. உலகில் நாம் நாள்தோறும் செய்யும் செயல்களை உயர்ந்த எண்ணங்களுடன் சிந்தனைகளுடன் செய்ய வேண்டும் என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் யோகா செய்வது, பிராணயாமம்செய்வது, தியானம் செய்வது போன்ற செயல்கள் அனைத் தும் ஞானயோகத்தில் சேரும். கடவு ளைப் பற்றி பக்தயுடன் பாடுவது, அர்ச்சனை கள் செய்வது, பஜனை பாடுவது, கடவுள் வழிபாடு செய்வது போன்றவை பக்தியோகம் என்று ஆன்மிகம் கூறுகிறது. இடைவிடாமல் பக்தியோகத்தைக் கடைப்பிடித்து வரும்போது அதாவது பக்தி யோகத்தை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

அவ்வாறு ஒருவன் ஆன்மீக வழியில் பக்தியோகத்தை நன்கு உணர்ந்து அதனை இடைவிடாது கடைபிடித்து வரும்போது நாளடை வில் அவனுக்கு ஞான யோகம் கிட்டும் என்று ஆன்மிகம் கூறுகிறது. மனம், வாக்கு, செயல் மூன்றிலும் தூய்மையைத் தவறாமல் கடைப்பிடித்து வரவேண்டும். தியானம் ஜபம் பஜனை போன்றவை பக்தியோகத்தைச் சேரும். பக்தி யோகத்தையும் கர்ம யோகத்தையும் கடைப்பிடித்து வந்தால் ஞான யோகத்தை அடையலாம் என்று ஆன்மிகம் கூறுகிறது.

உண்மைப் பொருளையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதனை அடைவதற்கான வழிமுறை களையும், கர்மயோகம், பக்தியோகம் ஞானயோகம் ஆகிய மூன்றையும் நன்கு அறிந்துகொண்டு அதன்படி செயல்புரியும்போது ஆன் மீக வழியில் நாம் விரும்பும் தேடும் மன அமைதி கிடைக்கும்.

பொதுவாக மௌனமாக இருப்பது பலருக்கு சிரமமமாக இருக்கிறது. நாம் பேசாமல் அமைதியாக இருந்தாலும் எண்ணற்ற எண் ணங்களின் அலைகள் கடல் அலைகள்போல் நமது உள்ளத்தில் அடித்துக்கொண்டே இருக்கிறது. அந்த எண்ண அலைகள் முற்றிலும் ஓயும்போது மனம் அமைதி பெறுகிறது. மௌன விரதம் என்பது வாய் பேசாமல் இருப்பது என்று பெரும்பாலும் தவறாக எண்ணிக் கொண்டு இருக்கிறோம். ''தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது எக்காலம்'' என்று பத்ரகிரியார் என்ற சித்தர் புலம்பி இருக்கிறார். வெளிப்புற மௌனம், அக மௌனம் என்று மௌனத்தைப் பற்றி ஆன் மிகம் கூறுகிறது. வெளிப்புற மௌனம் என்பது யாரிடமும் வாய் பேசாமல் அமைதியாக இருப்பது என்று பொருள்.

வெளிப்புற மௌனத்தை அதாவது வாய் பேசாமல் இருந்து பெரும்பான்மையோர் எளி தில் கடைபிடிக்கிறார்கள். அக மௌனம் என்பது



நமது மனதில் ஏற்படும் எண்ண அலைகளைக் கட்டுபடுத்தி எந்தவிதமான சிந்தனைகளும் இல்லாமல் அமைதியாக இருப்பது என்று ஆன் மிகம் கூறுகிறது. அக மௌனம் கடைபிடிப்பதற்கு ஆன்மீக வழியில் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

அக மௌனம் நமது ஆழ்மனதுடன் இணைக்கிறது. மேலும் நாம் விரும்பும் தேடும் மன அமைதியையும் தருகிறது. அக மௌ னம் என்பது ஒரு போதி மரம் போன்றது.

நமக்கு வரக்கூடிய இன்ப துன்பங்களை அக மௌனத்தால் சந்திக்கும்போது நாம் எவ்விதமான மன அழுத்தமின்றி எப்போதும் இயல்பு நிலையில் இருக்க முடியும். அதாவது நாம் தேடும் விரும்பும் அமைதி ஆன்மீக வழியில் அக மௌனத்தால் கிடைக்கும்.

– அமைதி தொடரும்



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
Tahsildar (Retd)
கைபேசி:
9894043308

e-magazine
aanmeegamalar.com

# இந்த நாயனார் இருந்திருந்தால் தமிழகத்தில் பலபேருக்கு நாக்கு இல்லாமல் திரிந்திருப்பார்கள்



காவிரி பாயும் சோழ வளநாட்டில் வரிஞ்சையூர் என்ற இடத்தில் வேளாளர் குலத்தில் அவதரித்தவர் சத்தி நாயனார். திருவாரூரிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் வழியிலுள்ள கீழ் வேளூரிலிருந்து கச்சனம் செல்லும் பாதையில் மூன்று கி.மீ. தொலைவில் உள்ள தேவூரிலிருந்து சுமார் மூன்று கி.மீ. தொலைவில் உள்ளது வரிஞ்சையூர் என்னும் அழகிய கிராமம். தற்போது அதனை வரிஞ்சியூர் என்று அழைக்கிறார்கள்.

வரிஞ்சையூரில் அவதரித்த சத்தி நாயனார், மாலயன் முதல் தேவர்கள் காண மாட்டாத சிலம்படிகளுக்கு ஆட்செய்து பக்தியில் சிறந்து விளங்கினார். அவரது இயற்பெயர் இன்னதென்று அறியவில்லை.

ஆன்மிகமலர்

விபூதி, ருத்திராட்சம், சடாமுடி கொண்ட சிவனடியார்கள் தன்னில் இலயித்து தன்னுள் எம்பெருமானாகிய சிவபெருமானை நிறுத்தி மகிழ்வர். எங்கும் சிவம் எதிலும் சிவம் என்பதால் சிவனடியார்களைத் துன்புறுத்தி இகழ்ந்து பேசுவது பெருங்குற்றம். அப்படி செய் பவர்கள் நரகத்துக்குச் செல்வார்கள் என்ற கொள்கையுடன் வாழ்ந்து வந்தார்.

இளமை முதலே சிவபெருமானின் மீது அளவற்ற பக்தியை கொண்டிருந்த சத்தி நாயனார் இளமையிலேயே சடைமுடியுடையவர்.

சிவனின் மீது பற்றுக்கொண்டு சிவனடியார்களுக்கு உதவுவதையே பெரும் பேறாக நினைத்து மகிழ்ந்து வாழ்ந்து வந்த சத்தி நாயனாருக்கு **சிவனை யாராவது பழித்து அல்லது இகழ்ந்து பேசினால் அவர்களது நாவை தம்மிடம் இருக்கும் குறட்டினால் பிடித்து அரிவார்**. அவர்கள் நாவினை அரியும் வலுவைக் கொண்டிருப்பதாலேயே அவர் சத்தியார் என்றழைக்கபெற்றார். சிவனின் மீது கொண்டிருந்த அன்பினாலேயே இத்தகைய அன்பை செய்து வந்து சிவனின் அன்பை பெற்றார்.

ஆண்மையுடடைய திருத்தொண்டை நிலை பெற்ற பெரிய உலகில் பற்பலகாலம் இடைவிடாது செய்துவந்தார், சிவனடியார்களை யாரும் இகழா வண்ணம் முழுக்க முழுக்க சிவனுக்காகவே வாழ்ந்துவந்தார். அளவற்ற தொண்டாற்றி சிவனது பாதத்தில் சரணடைந்தார். ஐப்பசி மாதம் பூரம் நட்சத்திரத்தன்று சிவாலயங்களில் இவருக்கு குருபூஜை கொண்டாடப்படுகிறது.

இதுபோன்ற தீவிர ஆன்மிக அன்பர்கள் இல்லாததால்தான், தமிழகத்தில் மூட்டைபூச்சிகள் கூட்டம் பெருக்கெடுத்துவிட்டது. கடவுளை, மதத்தை, வழிபாட்டு முறையை கிண்டல் செய்யும் கயவர்கள் கூட்டம் மாட்டுமந்தை போன்று பெருகிவிட்டது.

இதுபோன்ற இறைபக்தியுடன், இறைவன், மதம், கலாச்சாரம் போன்றவற்றின் மீது பற்றுடன் நமது சந்ததியினர் வளரவைக்கவேண்டும். இதனால், இதுபோன்ற நாயன்மார்கள், ஆழ்வார்கள் வரலாற்றை அவர்களுக்கு எடுத்துரைத்தால் போதும், கயவர்கள் கொட்டம் அடங்கிவிடும்.

**இன்றைக்கு இந்த நாயனார் இருந்திருந் தால் தமிழகத்தில் பலபேர் நாக்கு இல்லாமல் அலைந்திருப்பார்கள்.**

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

gsspecialfood.com



கீதாசமையல்

# gsspecialfood

## ஆன்லைன் இயற்கை உணவுப்பொருள் அங்காடி

**தரமாக, சுத்தமாக, கலப்படமின்றி தயாரிக்கப்பட்டது.**
**எந்தவித இரசாயண கலவையும் பயன்படுத்தாமல் தயாரிக்கப்பட்டது**
(இட்லி பொடியில் பூண்டு சேர்க்காமல் தயாரிக்கப்பட்டது)

**சத்துமாவு**
41வகை தானியங்களில் தயாரிக்கப்பட்டது

**கருப்பு உளுந்து** கஞ்சிமாவு

**சின்ன வெங்காய வடகம்**

**புளிசாதப் பொடி**

**வெயிட் லாஸ் கஞ்சி மாவு**

வல்லாரை கீரை இட்லிபொடி

கறிவேப்பிலை இட்லிபொடி

தூதுவளை கீரை இட்லிபொடி

கொள்ளு இட்லிபொடி

முடக்கத்தான் கீரை இட்லிபொடி

எள் இட்லிபொடி

பூண்டு இட்லி பொடி

**நலங்கு மாவு**
35 வகை மூலிகைகளில் தயாரிக்கப்பட்டது (வெயிலுக்கு குளிர்ச்சி தரும், பெண்கள் மட்டும்)

மேற்கண்ட பொருட்கள் தேவைப்படுபவர்கள் கீழ்காணும் வாட்சப் எண்ணில் மெசேஜ் செய்து பெற்றுக்கொள்ளவும்

gsspecialfood.com

**7550199561**

fssai
REGISTRATION
22424543000080

